THOLCAPYA-NUNNOOL,

OR A

COMPARATIVE REFERENCE EDITION

OF THE

THOLCAPYAM AND THE NUNNOOL,

(THE MOST ANCIENT AND ONLY STANDARD SYSTEMS OF GRAMMATICAL LITERATURE),

WITH

EXAMPLES, AND NOTES CRITICAL AND EXPLANATORY;

TO WHICH ARE APPENDED A SYNOPSIS OF THE WHOLE OF DRAVIDIAN PHILOLOGY, AND AN ACCOUNT OF THE STANDARD AUTHORS AND COMMENTATORS IN TAMIL.

BY

S. SAMUEL PILLAY.

REVISED BY

WALTER JOYES, ESQ.

PART I.

MADRAS:

PRINTED FOR THE EDITOR,

BY D. P. L. C. CONNOR, AT THE PRESS OF THE SOCIETY FOR PROMOTING CHRISTIAN KNOWLEDGE, VEPERY.

1858.

கடவுள்வணக்கம்—அவையடக்கம்.

எழுத்திற் சிறந்த வியற்பெயர்ப் பெருமையின்
வழுத்துமாண் மாட்சி மங்கல வாய்மைய—
சொல்லெனுந் தொல்பெயர் துளங்குபு வுலகம்
அல்லிருள் கெடவரு ளதனினூஉங் கமைந்த—
பொருளெலாம் பொலிந்த புண்ணிய மும்மை
யொருவனு நிலையு முயர்பத முணர்த்தும்—
யாப்பினுட் சிறந்த யாப்புடை யன்பின்
வாய்ப்பினுட் பரபதம் வாய்ந்த வளமைய—
அணிமுடி யன்பர்பெற் றுறிய முண்முடி
யணியணி யரங்கையி னம்மையை நிலவும்—
திருவுள மலர்ச்சியிற் செப்பியாங் கிறைஞ்சுதூஉம்,
திருவாய் மலர்ச்சித் தெய்வஞா னத்தொளி
நீர்மிசை நிகழ்ந்த நிமல பிரோரகப்
போர்மலி சமயத்துட் புராண புருடனை :—
தொல்லையி னொருமைத் தோற்றமே யுடைய
சொல்லைப் பன்மையவ் வொருமையை முடிக்குந்
தொல்காப் பியநன் னூலெனுஞ் சொன்மறை
பல்காப் பியங்களும் பகரும் பதமெனுஅச்
சமரச பாடியங் காரண நாமம்
ஐந்திர பாணி நீயமும் வழியா
அகத்திய மாக்கிய வந்தமிழ் முகத்தாற்
சகத்திற் கழிந்த சழக்குடைக் கடையேன்
யானே யெனினு மறிவறி யந்தணர்
வானேய் புலமை வளம்பல் கினரா
எற்றே யிவர்க்கு நாமென் றிருப்பேற்
குற்றங் களைஇக் குணங்கொடு கொள்பவவென்
றுண்ணிக மாசை யூஉத
வெண்ணிய தெண்ணியாங் கினிதாஅகென்றே.

தொல்காப்பிய நன்னூல் ;

இதனுள்

தொல்காப்பியமும் நன்னூலும், தம்முள்ளொற்றுமைவேற்றுமைகள்விளங்கி, ஒருபான்மை உதாரணசகிதமாய்ச் சூத்திரசம்பந்தத்துடனே அச்சிடப்பட்டிருக்கின்றன :

இந்நூல்,

ஐந்திரபாணிநீயம்என்றும் சமரசபாஷியசித்தாந்தம்என்றும் இனிப்பெயர் பெறும் பெற்றிக்கேற்ப உத்தேசித்து, வடமொழிவழக்கும் தமிழ்மொழி வழக்கும் ஐங்கிலியவழக்குங்கொண்டிருக்கின்ற சம்பந்தா சம்பந்தங்களைக் காட்டிப் பூரணவிருத்தியா யெழுதப்புகுந்திருக்குமுனைநூலுக்கு,

முதற்பிரயத்தனம்.

இப்பதிப்பு

இ. சாமுவேல்பிள்ளையினால், வால்ற்றர் ஜாயீஸ்
துரையவர்களுதவியைக்கொண்டு நிறைவேறியது.

நூற்பயன்,

இத்தேசத்தாரிடத்தில் ஐங்கிலியதுரைத்தனத்தார் கல்விவிருத்திபண்ணி வருமுயற்சியினால், இனித்தமிழ்நாட்டின் நன்மைக்கென்று புது நூலியற்றுவோர்க்குப் பாஷைநடைகளின் பேதாபேதக் கியானத்திற்குவேண்டிய, தெளிவு.

இஃது, ௲அ௱அம் ௵
சென்னைமாநகரம், கிறிஸ்துமதக்கியான விளக்கச்சங்கத்தார் அச்சுக் கூடத்தில் கானர்துரையவர்களால் பதிப்பிக்கப்பட்டது.

செயப்படுபொருள்.

மன்பதைத்தொகுதிவாழ் வள்..கவையாந்
தன்னிடைமுந்துநூன் மன்னியபன்மொழி
ஒருங்கெலாமொ.பகுதிய தெனுந்துணிபினை
மருங்குலாமொற்றுமை நயவளம்வல்லுநர்
கண்ண்டுசமரச பாடியங்கண்டனர்
அண்டர்நாட்டதுவெனு மாரியமாதியாங்
கூரியபழமையின் கோட்பாடுடைய
ஆரியமொழிகளு மமிழ்துறழ்தமிழார்
கிளைபடுமொழிகளுங் கிழக்குரியனவும்
விளைந்தியல்விரிந்த மேற்கிடைப்பட்டவும்
முற்றியன்மொழிக்கொடுஞ் சேமியன்மொழிக்கொடும்
உற்றுணர்ந்துய்த்துணர் வைப்பெனுமுத்தியான்
ஒற்றுமைவேற்றுமை தம்முண்முடித்தனர்
பட்டபல்பாடைக் கொருப்படவொன்று
இலக்கணசித்தாந்த மெனவிரித்தியற்றிய
இலக்கணங்களையே யியற்றமிழ்முதலிய
பஞ்சதிராவிடம் பாற்படவொருநெறி
யெஞ்சவிலிளம்பூ ரணமொடுசேனா
வரையமுநச்சினார்க் கினியமுமாறுத்
திரைபுரையுரைபுத் தம்புதுரைத்தேம்
நமச்சிவாயனு ஞானதேசிகனும்
அமச்சவுந்தீக்கத னறைஞ்சவிவேகமும்
நன்னூனிறுத்த முறைக்குண்ணடக்கும்
பன்னூற்றொல்காப்பியம் படர்பதார்த்தம்
வெளிப்படவிரிந்த வேற்றிலக்கணங்களும்
தெளிதமிழ்க்கண்ணார் தெரிந்துவிளங்கச்
செந்தமிழ்நடைமற் றேனையநடைக்குப்
பிந்தியதன்ன்மை பெரிதுஞ்சிறப்பத்
தொல்காப்பியநன்னூ லெனுந்தொல்பெயர்க்
கெல்லாங்கொள்கையி னிதுபெயராகச்
சமரசவிருத்தி சாலத்
தமிழ்மொழிப்படுவதாஞ் செயப்படுபொருளே.

PREFACE.

I. PANAMBARAN'S INTRODUCTION TO THE THOLCAPYAM.

§ வடவேங்கடந் தென்குமரி, ஆயிடைத், தமிழ்கூறுநல்லுலகத்து, வழக்குஞ் செய்யுளுமாயிருமுதலின், எழுத்துஞ் சொல்லும் பொருளுநாடிச், செந்தமிழியற்கை சிவணியநிலத்தொடு, முந்துநூல்கண்டு முறைப்படவெண்ணிப், புலந்தொகுத்தோனே போக்கறுபனுவல், நிலந்தருதிருவிற் பாண்டியனவையத், தறங்கரைநாவி னான்மறைமுற்றிய, அதங்கோட்டாசாற் கரிறபத்தெரிந்து, மயங்காமரபி னெழுத்துமுறைகாட்டி, மல்குநீர்வரைப்பின் † ஐந்திரநிறைந்த, தொல்காப்பியனெனத் தன்பெயர்தோற்றிப், பல்புகழ்நிறுத்த படிமையோனே.

This introduction or சிறப்புப்பாயிரம் was furnished to the Author of this work as a certificate by Panambaran, a pupil like himself of the great Rishi Agastyan. It is said in the above document that this work had been read, discussed, and approved of before the king Pandyan's Conclave of Poets, the Adjudicator being Athancottasan, another School-fellow of Tholcapyan and disciple of Agastyan. These three personages were Rishis, and seem to have been more or less equal in every respect, except in their acquirements with regard to Tamil literature, in which Agastyan always stands first, Athancottasan second, and Tholcapyan third.

§ HISTORY, TRADITION, AND MYTHOLOGY.

† "ஐந்திரநிறைந்ததொல்காப்பியம்," *Tholcapyam in which Eyndrum is much followed* or *consulted.* By this phrase, commentators infer that Tholcapyan, in consequence of some disagreement with his Master Agastyan, had left him and joined the conclave at Benares, who advised him to follow the Eyndra system founded by Indra in Sanscrit. Eyndrum is more ancient than Panineam, even as the Tholcapyam is more ancient than the Nunnool; and the more recent works are on both cases more read in modern days.

The cause of disagreement above alluded to, was this :—When, on the occasion of Siva's marriage with Parvati at Kailas, all the inhabitants of the three worlds were present there upon invitation, of course Agastyan and

Tholcapyan were also asked, more especially from the fact of their being esteemed celestial Rishis. Now the Himalayas, in which Kailas is only a peak, not being able to support the universal concourse of the three worlds, began to sink down like one of the sides of a balance, while Cape Comorin became more elevated in proportion, and gradually rose up together with the Peninsula of Southern India. At this crisis Siva having grown very uneasy applied to Narada Rishi for advice, and he recommended that Agastyan should be put in possession of the Viswamantrum, that he might go and rest upon Podigai (a Mountain near Cape Comorin). This was done, and by the influence of that Mantrum, Agastyan grew so big like another globe, that the balance was adjusted, and the marriage-ceremony happily completed.

But on Agastyan's sudden starting from the Himalayas, he entrusted his wife to Tholcapyan, with this injunction, that he was to bring her to him safe after the marriage, and that during the journey they should never walk at less than three feet distance from one another. This Tholcapyan failed to do, for when crossing the Cavery, the current being strong, he helped the poor woman forward leading her by her hand to the opposite bank. For this violation of his command, Tholcapyan was cursed by his Teacher to the effect that he was never to enter Swergham. Being provoked in no small degree, Tholcapyan re-cursed the foolish Rishi, saying that he too would never enter Swergham, and that all the works which he had written in Tamil would be lost. This circumstance in Hindu Mythology serves to account for the loss of the original works of that great man, and for the production byTholcapyan of the following celebrated Treatise of Tamil Grammar after the Eyndra system, in opposition to Agastyan's work which the Rishi had produced in opposition to the generally received opinions of the conclave of sages at Neimisaranyam near Benares.

§ DIVINE ORIGIN OF THE TAMIL LANGUAGE.

The Sanscrit Language was once withdrawn into heaven from earth by the immortals, as a punishment upon men, and then a Rishi by name Panini invoked Siva to instruct and inspire the language into him. After thousands of years of austere penance and contemplation, Siva condescended to appear before Panini, and beat his Tamarakum (a little hand drum) from which emanated fourteen sounds; each sound formed a sutrum, and communicated a certain class of letters of the celestial Alphabet. Panini was further inspired to work out the Grammar of the Language for which he had so long entreated. The Sutrums run thus:—

[1] అ ఇ ఉ ణ్ || [2] ఋ ఌ క్ || [3] ఏ ఓ ఙ్ || [4] ఐ ఔ చ్ || [5] హ య వ ర ట్ || [6] ల ణ్ || [7] ఞ మ ఙ ణ న మ్ || [8] ఝ భ ఞ్ || [9] ఘ ఢ ధ ష్ || [10] జ బ గ డ ద శ్ || [11] ఖ ఫ ఛ ఠ థ చ ట త వ్ || [12] క ప య్ || [13] శ ష స ర్ || [14] హ ల్ || The whole is termed Sivasutra-Jalam in Panini. Vide Wilson's Sanscrit Grammar, p. 6.

This, says Tradition, is the origin of the Sanscrit language; and to rival it, Tamulians too claim divine origin for their tongue. The Tamil Language owes its origin to the disagreement of Agastyan with the College of Sanscrit Scholars at Benares. The Rishi, ever known in the Puranas as an unyielding and obstinate character, on one occasion carried his opposition so far as to bring down upon him expulsion from the College. Enraged at this treatment, he appeared before Soobramanyan at Kailas, and while entreating the god to bestow upon him power and ability to create a new language to rival Sanscrit, and thereby check the pride of the haughty conclave, the court where they were conversing, was gradually filled by a very agreeable smell. Agastyan asked Soobramanyan what this meant, and was ordered to approach a corner of the Court; and there he found deposited a large bundle sending forth most delicious odour. "தமிழ் தமிழ்" Tamil, Tamil, exclaimed the sage. Well that is the language, replied the god which I delegate you to propagate among the people in the South, so as to subdue your opponents. The bundle "Tamil" consisted of some olei books which the offspring of Siva taught the Rishi, who proceeded at once to the South of India and composed his works and systems with the assistance of his twelve disciples. See p. 121. The term தமிழ் signifies *good*, or *sweet*. Vide the Nigandu, Thivagarum, and Rottler, under that word.

§ COMPARATIVE MERITS OF THE THOLCAPYAM AND THE NUNNOOL.

The Tholcapyam and the Nunnool are in other words no other than the Eyndrum and the Panineum in principle. The former is treated more upon the Inductive method. The Nunnool lays down general rules and divides its subjects orderly into general classes, species and particulars; the Tholcapyam gives a few general rules only, and that too, in no regular order. It is for the most part one continued string of particulars and individuals,

and the reader has the labour either to commit the Sutrums to memory or to compare them with others before he can arrive at a definite conclusion. Pavananti studied the Tholcapyam Eyndrum and the confused heap of the Agastyam, and must have well digested the whole plan of the Panineum before he wrote his celebrated Nunnool, which is executed entirely upon the Syllogistic or Deductive system. See Stokes' Edition of Niti Neri Vilakkum (நீதிநெறிவிளக்கம்), Preface, p. VIII. However the Tholcapyam stands unrivalled in respect of its particular and minute rules on individual subjects. It is still more unrivalled in its third or last Chapter, the Grammar of general knowledge (பொருளதிகாரம்); and its style and wording are of great use to all students of ancient Tamil works.

II. SAMANA MOONIVAR'S INTRODUCTION TO THE NUNNOOL.

மலர்தலையுலகின் மல்கிருளகல, இலகொளிபரப்பி யாவையும்விளக்கும், பருதியினொருதானாகிமுதலீ, றொப்பளவாசை முனிவிகந்துயர்ந்த, அற்புதமூர்த்திதன் னலர்தருதன்மையின், மனவிருளிரிய மாண்பொருண்முழுவதும், முனிவறவருளிய மூவறுமொழியுளும், குணகடல்குமரி குடகம் வேங்கடம், எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க்கடலுள், அரும்பொருளைந் தையும் யாவருமுணரத், தொகைவகைவிரியிற் றருகெனத்துன்னார், இகலறநூறி யிருநிலமுழுவதுந், தனதெனக்கோலித்தன்மதவாரணந், திசைதொறுநிறுவிய திறலுறுதொல்சீர்க், கருங்கழல்வெண்குடைக் கார்நிகர் வண்கைத், திருந்தியசெங்கோற் சீயகங்கன், அருங்கலைவினோதன் அமராபரணன், மொழிந்தனனாக முன்னோர்நூலின் வழியேநன்னூற் பெயரின் வகுத்தனன், பொன்மதிற்சனகைச் சன்மதிமுனியருள், பன்னருஞ்சிறப்பிற் பவணந்தி, என்னுநாமத் திருந்தவத்தோனே.

This is the சிறப்புப்பாயிரம் of the Nunnool, in which the name of the Author பவணந்தி and that of his Patron சீயகங்கன் Seya-Gunghan are mentioned. It is the production of Samana Moonivar, சமணமுனிவர், the disciple of Pavananti, and the earliest Commentator of the Nunnool. See Joyes' Grammatica Tamuliensis, Book I. Chap. I. Sect. I.

CONTENTS.

1. Preface. v
2. Contents. ix
3. Grammar of General Prefaces. (பொதுப்பாயிரம்) x
4. Of Particular Prefaces or Introductions. (சிறப்புப்பாயிரம்) xiv
5. **Book I.** எழுத்ததிகாரம், நூன்மரபு, Orthography. 1
6. Chapter II. மொழிமரபு of Letters as constituent Parts of words. 3
7. Chapter III. பிறப்பியல் Articulation of Letters. 6
8. Chapter IV. புணரியல் Principia of Combination and Terminology 8
9. Chapter V. தொகைமரபு A Compendium of Combination. ... 11
10. Chapter VI. உருபியல் Combination of Casual Endings. ... 14
11. Chapter VII. உயிர்மயங்கியல் Combination of Vowel-Finals. ... 17
12. Chapter VIII. புள்ளிமயங்கியல் Combination of Consonant-Finals. 24
13. Chapter IX. குற்றியலுகரப்புணரியல் Combination of Abbreviate உ. 32
14. Memoranda Book I. Part I. 38
15. An Abstract of the whole Orthography. 39
16. **Book I. Part II.** The Nunnool, Chapter I. எழுத்தியல் 40
17. Chapter II. பதவியல் Of words, their Make and Parts. ... 45
18. Synthesis and Analysis of Divisibles. 53
19. Sanscrit Letters and Words வடமொழியாக்கம். 54
20. Appendix I. Conjugation and Inflection of Verbs. 56
21. உயிர்மெய்யெழுத்துக்கள். 63
22. Chapter III. உயிரீற்றுப்புணரியல். 64
23. Appendix to உயிரீற்றுப்புணரியல். 78
24. Chapter IV. மெய்யீற்றுப்புணரியல். 80
25. Chapter V. உருபுபுணரியல். 85
26. Abstract of the Orthography of the Nunnool. 89

27. **Synopsis.** 91-120
28. Standard Authors and Commentators. 121-125
29. An Appendix of Telugu Vowel-Consonants. ... ... 127&128
30. **Book II. Tholcapya-Nunnool,** சொல்லதிகாரம் Etymology; இளவியாக்கம். 1
31. Chapter II. வேற்றுமையியல். 4
32. Chapter III. வேற்றுமைமயங்கியல். 5
33. Chapter IV. விளிமரபு. 7
34. Chapter V. பெயரியல். 8
35. Chapter VI. வினையியல். 11
36. Chapter VII. இடையியல். 14
37. Chapter VIII. உரியியல். 16
38. Chapter IX. எச்சவியல். 18
39. **Nunnool,** Chapter I. பெயரியல். 21
40. Chapter II. வினையியல். 25
41. Chapter III. பொதுவியல். 27
42. Chapters IV. and V. இடையியல் and உரியியல், ... 30 & 31
43. **Tholcapya-Nunnool, Book III.** பொருளதிகாரம் Chapter I. அகத்திணையியல். 32
44. Chapter II. புறத்திணையியல். 35
45. Chapter III. களவியல். 39
46. Chapter IV. கற்பியல். 43
47. Chapter V. பொருளியல். 48
48. Chapter VI. மெய்ப்பாட்டியல். 50
49. Chapter VII. உவமவியல். 52
50. Chapter VIII. செய்யுளியல். 54
51. Chapter IX. மரபியல். 64
52. Memoranda. 69

N. B. The works or commentaries consulted in this Book are, the (இளம்பூரணம்) Ilamboornum, (நச்சினார்க்கினியம்) Nachinarkynium, (சேனாவரையம்) Sanavaryam, (புத்தம்புதுரை) the New Exposition by Sangra Namachyvayar and Sivagnana Dasighar, and (தொன்னூல்) the Thonnool by Beschi. See p. 121. Paras 5, 6, 9, 10, 11, 17.

பொதுப்பாயிரம்.

A GRAMMAR OF GENERAL PREFACES.

1. முகவுரைபதிகமணிந்துரைநூன்முகம், புறவுரைதந்துரைபுனைந்துரை பாயிரம்.

2. பாயிரம்பொதுச்சிறப் பெனவிருபாற்றே.

3. நூலேநுவல்வோ னுவலுந்திறனே, கொள்வோன்கோடற் கூற்றாமைந்து, மெல்லாநூற்கு மிவைபொதுப்பாயிரம்.

4. ¶ நூலினியல்பே நுவலினோரிரு, பாயிரந்தோற்றி மும்மையினொன்றாய், நாற்பொருட்பயத்தோ டெழுமதந்தழுவி, யையிருகுற்றமுமகற்றியம் மாட்சியோ, டெண்ணான்குத்தியினோத்துப்படல, மென்னுமுறுப்பினிற் சூத்திரங்காண்டிகை, விருத்தியாகும் விகற்பநடைபெறுமே.

5. முதல்வழிசார்பென நூன்மூன்றாகும்.

6. ¶ அவற்றுள், வினையினீங்கிவிளங்கியவறிவின், முனைவன்கண்டது முதனூலாகும்.

7. முன்னோர்நூலின் முடிபொருங்கொத்துப், பின்னோன்வேண்டும்விகற்பங்கூறி, யழியாமரபினது வழிநூலாகும்.

8. இருவர்நூற்கு மொருசிறை தொடங்கித், திரிபுவேறுடையது புடைநூலாகும்.

9. முன்னோர்மொழிபொருளே யன்றியவர்மொழியும்
பொன்னேபோற்போற்றுவமென்பதற்கு—முன்னோரின்
வேறுநூல்செய்துமெனு மேற்கோளிலென்பதற்குங்
கூறுபழஞ்சூத்திரத்தின் கோள்.

10. ¶ அறம்பொருளின்பம்வீ டடைதனூற்பயனே.

11. ¶ எழுவகைமதமே யுடன்படன்மறுத்தல், பிறர்தம்மதமேற் கொண்டுகளைவே, தாஅனாட்டித்தனாதுநிறுப்பே, யிருவர்மாறுகோளொருதலைதுணிவே, பிறநூற்குற்றங் காட்டலேனைப், பிறிதொடுபடாஅன் றன்மதங்கொளலே.

12. ¶ குன்றக்கூறன் மிகைபடக்கூறல் கூறியதுகூறன் மாறுகொளக்கூறல், வழூஉச்சொற்புணர்த்தன் மயங்கவைத்தல், வெற்றெனத்தொடுத்தன் மற்றொன்று விரித்தல், சென்றுதேய்ந்திறுத னின்றுபயனின்மை, யென்றிவையீரைங்குற்றநூற்கே.

13. ¶ சுருங்கச்சொல்லல் விளங்கவைத்த, னவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்த, லோசையுடைமையாழமுடைத்தாதன், முறையின்வைப்பே

யுலகமலையாமை,விழுமியதுபயத்தல்விளங்குதாரணத்த, தாகுதனூலிற்கழ கெனும்பத்தே.

14. ¶ நுதலிப்புகுதலோத்துமுறைவைப்பே,தொகுத்துச்சுட்டல் வகுத்துக்காட்டன், முடித்துக்காட்டன் முடிவிடங்கூற, லுனெடுத்துமொழிதல் பிறன்கோட்கூறல், சொற்பொருள்விரித்த ருெடர்சொற்புணர்த்த, விரட்டுறமொழித லேதுவின்முடித்த லொப்பின்முடித்தன் மாட்டெறிந்தொழுக, லிறந்ததுவிலக்க லெதிரதுபோற்றன், முன்மொழிந்துகோடல் பின்னதுநிறுத்தல் விகற்பத்தின்முடித்தன்முடிந்ததுமுடித்த,லுரைத்துமென்றலுரைத்தாமென்ற,லொருதலைதுணிதலெடுத்துக்காட்ட, லெடுத்தமொழியினெய்தவைத்த,லின்னதல்லதிதுவெனமொழித,லெஞ்சியசொல்லினெய்தக்கூறல் பிறநூன்முடிந்தது தானுடன்படுத, றன்குறிவழக்க மிகவெடுத்துரைத்தல்,சொல்லின்முடிவினப்பொருண்முடித்த, லொன்றினமுடித்தறன்னினமுடித்த, லுய்த்துணர்வைப்பெனவுத்தியெண்ணான்கே.

15. நூற்பொருள் வழக்கொடு வாய்பக்காட்டி, யேற்புழியறிந்திதற்கிவ்வகையாமெனத், தகும்வகை செலுத்து தந்திரவுத்தி.

16. ¶ நேரினமணியை நிரல்படவைத்தாங், கோரினப்பொருளை யொருவழிவைப்ப, தோத்தெனமொழிப வுயர்மொழிப்புலவர்.

17. ஒருநெறியன்றி விரவியபொருளாற், பொதுமொழிதொடரி னதுபடலமாகும்.

18. சில்வகையெழுத்திற் பல்வகைப் பொருளைச், செவ்வனாடியிற் செறித்தினிதுவிளக்கித் திட்பநுட்பஞ் சிறந்தனசூத்திரம்.

19. ¶ ஆற்றொழுக்கரிமா நோக்கந்தவளைப், பாய்த்துப்பருந்தின்வீழ் வன்னசூத்திரநிலை.

20. பிண்டந்தொகைவகை குறியேசெய்கை, கொண்டியல் புறனடைக் கூற்றனசூத்திரம்.

21. ¶ பாடங்கருத்தே சொல்வகை சொற்பொரு, டொகுத்துரையுதாரணம் வினவிடைவிசேடம்,விரிவதிகாரந் துணிவுபயனோ டாசிரியவசனமென்றீரேழுரையே.

22. கருத்துப்பதப்பொருள் காட்டுமூன்றினு மவற்றொடுவினவிடை யாக்கலானுஞ், சூத்திரத்துட்பொரு டோற்றுவகாண்டிகை.

23. சூத்திரத்துட்பொரு ளன்றியுமாண்டைக், கின்றியமையாதி யாவையும்விளங்கத்,தன்னுரையானும் பிறநூலானு,மையமகலவைங் காண்டிகையுறுப்பொடு, மெய்யினையெஞ்சா திசைப்பதுவிருத்தி.

24. ¶ பஞ்சிதன்சொல்லாம் பனுவலிழையாகச்
செஞ்சொற்புலவனே சேயிழையா—வெஞ்சாத
கையேவாயாகக் கதிரேமதியாக
மையிலாநூன் முடியுமாறு.

25. உரத்தின்வளம்பெருக்கி யுள்ளியதீமைப்
புரத்தின்வளமுருக்கிப்பொல்லா—மரத்தின்
கனக்கோட்டந்தீர்க்குநூ லஃதேபோன்மாந்தர்
மனக்கோட்டந்தீர்க்குநூன் மாண்பு.

26. ¶ குலனருடெய்வங் கொள்கைமேன்மை, கலைபயிறெளிவு கட்டுரை வன்மை,நிலமலைநிறைகோன் மலர்நிகர்மாட்சியு, முலகியலறிவோ டுயர்குணமினையவு, மமைபவனூ லுரையா சிரியன்னே.

27. தெரிவரும்பெருமையுந் திண்மையும்பொறையும், பருவமுயற்சி யளவிற்பயத்தலு, மருவியநன்னில மாண்பாகும்மே.

28. அளக்கலாகா வளவும்பொருளுந் துளக்கலாகா நிலையுந்தோற்றமும் வறப்பினும்வளந்தரும் வண்மையுமலைக்கே. [ற்கே.

29. ஐயந்திரப் பொருளை யுணர்த்தலு மெய்ந்நடுநிலையு மிகுநிறை கோ

30. மங்கலமாகி யின்றியமையா, தியாவருமகிழ்ந்து மேற்கொளமெல் கிப் பொழுதின்முகமலர் வுடையதுபூவே.

31. ¶ மொழிகுணமின்மையு மிழிகுண வியல்பு,மழுக்காறவாவஞ்ச மச்சமாடலுங், கழற்குடமடற்பனை பருத்திக்குண்டிகை, முடத்தெங்கொப்பென முரண்கொள்சிந்தையு, முடையோரிலரா சிரியராகுதலே.

32. பெய்தமுறையன்றிப் பிறழவுடன்றருஞ், செய்திகழற்பெய் குடத்தின்சீரே.

33. தானேதரக்கொளி னன்றித்தன்பால், மேவிக்கொளக்கொடா விடத்ததுமடற்பனை.

34. அரிதிற்பெயக்கொண் டப்பொருடான்பிறர்க், கெளிதீவில்லது பருத்திக்குண்டிகை.

35. பல்வகையுதவிவழிபடுபண்பினல்லோர்க்களிக்கு மதுமுடத்தெங்கே.

36. ¶ ஈதலியல்பேயியம்புங்காலைக்,காலமுமிடனும்வாலிதினோக்கிச்,சிறந்துழியிருந்துதன் றெய்வம்வாழ்த்தி,யுரைக்கப்படும்பொரு ளுள்ளத்தமைத்து,விரையான்வெகுளான் விரும்பிமுகமலர்ந்து, கொள்வோன் கொள்வகை யறிந்தவனுளங்கொளக், கோட்டமின்மனத்தினூல் கொடுத்தலென்ப.

37. தன்மகனுசான் மகனேமன்மகன், பொருணனிகொடுப்போன் வழிபடுவோனே, யுரைகோளாளற் குரைப்பதுநூலே.

38. அன்னமாவே மண்ணொடுகிளியே, யில்லிக்குடமா டெருமைநெய்யரியன்னர்தலையிடை கடைமாணுக்கர்.

39. களிமடிமானி காமிகள்வன் பிணியனேழைபிணக்கன்சினத்தன், றுயில்வோன்மந்தன் றொன்னூற்கஞ்சித், தடுமாறுளத்தன் றறுகணன்பாவி, படிறனின்னோர்க்குப் பகரார்நூலே.

40. ¶ கோடன்மரபே கூறுங்காலைப், பொழுதொடுசென்று வழிபடன்முனியான், குணத்தொடுபழகியவன்குறிப்பிற்சார்ந், திருவெனவிருந்துசொல்லெனச்சொல்லிப், பருகுவனன்னவார்வத்தனாகிச், சித்திரப்பாவையின

த்தகவடங்கிச், செவிவாயாக நெஞ்சுகளனுகக், கேட்டவைகேட்டவைவி டாதுளத்தமைத்துப், போவெனப்போதலென்மனார்புலவர்.

41. ¶ நூல்பயிலியல்பே நூவலின்வழக்கறிதல், பாடம்போற்றல்கேட்டவைநினைத்தல், ஆசாற்சார்ந்தவையமைவரக்கேட்டல், அம்மாண்புடையோர்தம்மொடுபயிறல், வினுதல்வினுயவை விடுத்தலென்றிவை, கடனுக்கொளினேமடநனியிகக்கும்.

42. ஒருகுறிகேட்போ னிருகாற்கேட்பிற்பெருக நூலிற்பிழைபாடிலனே.

43. முக்காற்கேட்பின் முறையறிந்துரைக்கும்.

44. ஆசானுரைத்த தமைவரக்கொளினுங் காற்கூறல்லது பற்றலனுகும்.

45. அவ்வினையாளரொடு பயில்வகையொருகாற், செவ்விதினுரைப்பயவ் விருகாலு, மையறுபுலமைமாண்புடைத்தாகும்.

46. அழலினீங்கானணுகானஞ்சி, நிழலினீங்கானிறைந்தநெஞ்சமோ,டெத்திறத்தாசானுவக்குமத்திற, மறத்திற்றிரியாப் படர்ச்சிவழிபாடே.

பொதுப்பாயிரமுற்றிற்று.

சிறப்புப்பாயிரம்.

OF PARTICULAR PREFACES OR INTRODUCTIONS.

1. ¶ ஆக்கியோன்பெயரே வழியேயெல்லை, நூற்பெயர்யாப்பே நுதலியபொருளே, கேட்போர்பயனே டாயெண்பொருளும், வாய்ப்பக்காட்டல்பாயிரத்தியல்பே.

2. காலங்களனே காரணமென்றிம்,மூவகையேற்றி மொழிநருமுளரே.

3. ¶ முதனூல்கருத்த னளவுமிகுதி, பொருள்செய்வித்தோன் றன்மைமுதனிமித்தினு, மிடுகுறியானுநூற் கெய்தும்பெயரே.

4. ¶ தொகுத்தல்விரித்த றொகைவிரிமொழிபெயர்ப், பெனத்தகுநூல்யாப்பீரிரண்டென்ப.

5. ¶ தன்னுசிரியன் றன்னொடுகற்றேன், றன்மாணுக்கன்றகுமுரைகாரனென், றின்னோர்பாயிர மியம்புதல்கடனே. [தியன்றே.

6. ¶ தோன்றுதோற்றித் துறைபலமுடிப்பினுந், தான்றற்புகழ்தறகு

7. மன்னுடைமன்றத் தோலைத்தூக்கினுந், தன்னுடையாற்றலுணராரிடையினு, மன்னியவவையிடை வெல்லுறுபொழுதினுந், தன்னைமறுதலைப் பழித்தகாலையுந், தன்னைப்புகழ்தலுந்தகும்புலவோர்க்கே.

8. ¶ ஆயிரமுகத்தா னகன்றதாயினும் பாயிரமில்லது பனுவலன்றே.

9. மாடக்குச்சித்திரமு மாநகர்க்குக்கோபுரமு
மாடமைத்தோணல்லார்க் கணியும்போ—லாடிமு
னேதுரையா நின்ற வணிந்துரையையெந்நூற்கும்
பெய்துரையாவைத்தார் பெரிது.

சிறப்புப்பாயிரமுற்றிற்று.

சமரசபாஷிய சித்தாந்தம்.

அகவல்.

உலகம்விரிந்த வொருசொல் லதுபோற்
பலகம்பலைப்படப் பட்டபல்பாடையும்
ஆதியினாதியா னருளுபு மானவர்க்
கோதியவொருமுதல் வழிப்பிறந்தனவவ்
வாதிநூலொருசா ரறிவினரம்மதம்
வாதநூல்வழாஅ மரபின ருணர்த்தின்
பகுதியதொருமையும் விகுதியதொருமையுங்
பகுதிவேற்றுமையும் விகுதிவேற்றுமையும்
திரிபதுமரபுந் தெரியாவிகாரமும்
உரிமையும்பொதுமையும் பாற்படவோர்ந்து
பன்மையாப்படர்ந்தவற் றினஞ்சிலகண்டு
சின்மையிலக்கணந் திறப்படத்தெரிந்தாங்
கவ்வத்தொகைவகை விரிகளையவையவை
யெவ்வெவ்வழிகளி னியலுமவ்வழிகளிற்
சேர்த்தித்தெளிந்த திறன்மூவகைய
பாத்தவையாசிய வைரவப்பாலன ;—
ஓரசையொருமொழி யுள்ளசைமுழுமொழி
ஓரிருமொழியுஞ் சேமியஞ்சீனமா
ஆரியமாரிய மாமிரண்டொருபொது
வாகியவுறுப்பியன் மொழிகளிப்பிரதமா
நிலன்பெறநிகழ்வன வனைத்தையுமுணர்த்திய
இலக்கணமொருகலை யெனும்பொதுவாய்பாட்
டியற்கையேசமரசஞ் சிறப்பிலக்கணங்கள்

வயின்வயினொழிய மாறுமரபுடை
வாய்மையுமுண்மையு நிலைஇயவழக்காற்
சேய்மையின்முனைவன் றெரித்ததுமொன்றே
அவனுமொருவனே யவனருண்மனுவோ
ரவர்முதலதுவுமா றொன்றவர்குலமும்
பாண்டையினிலத்திற் கொள்கையிற்படர்ச்சியிற்
கூடிய பிரிந்தன கொண்டனவிண்டன
பலவும்பல்வாய்ப் பல்கியுமவற்போல்
நிலவியவொருமையே நிறுப்புணர்த்தினான்.
முடிபினைமொழிவது சமரசபாடியம்,
கடைப்பிடிக்கருவிகள் கருதியநிறுத்திற்
சித்தாந்தமென்னுஞ் செம்பெயர்பெறுமால்,
உத்தியுமூகமு மொருமுதலனந்தன்
செப்புமாபாடியஞ் செப்பியபதஞ்சலி
யிப்புவித்தமிழி னியற்கையுந்தழீஇக்
கொண்டகோள்பிழையாக் கூறியதாகலின்
வண்மையந்திராவிட மாபாடியமென
வகத்தியமுதலாச் சான்றோரறைந்தவை
யிகத்திகலாமை யியலும்பாலதென்
றறிவறியாரிய ரரிறீர்த்
திறையுமிலேன்செய லினிதுகொள்குவரோ.

N. B. This number or volume of the Tamil Museum is a complete book in itself, containing besides a synopsis of the whole system, the Original Texts of the Tholcapyam and the Nunnool, the only two standard works on the subject.

உ

முருகன்றுணை

சிறப்புப்பாயிரம்.

பூமிசையகலா நான்முகத்தொருவன்
படைப்புழியின்சொலி னியக்கந்தெரிப்பான்
இருக்கையாய்வாழிய ரொறுமேனிறுவிய
வேங்கடங்குமரி யோங்கியமேல்கீழ்ப்
புணரிசூழ்வரைப்பி லணவியமுத்தமிழ்
ஆன்றதொல்கடவுட் டோன்றுறுமைம்பொருள்
ஈரைஞ்ஞூற்றுச் சீரமை பணமணிச்
சூட்டருணெட்டுடற் கோட்டமில்பாப்பர
சேந்துபுகிடந்தமாண்ப ணைநீணிலத்
தேவருமுணராத் தாவரும்பயன்கொள
உயிர்தொறுஞ்சிவணிய செயிரறுபொதுநட
நவிலுந்தனிமுதல் தவலருங்கைவலத்
தமிழிசைகதுவிய தமருகத்தெழுமேழ்
இரட்டியவெழுத்தொலி தெருட்டியவாரிய
நெடுமொழிப்பாணினி மடனிகுமுதியோன்
போன்மெனவிருந்தமிழ்ப் பான்மைமுழுதுணர்
முகட்டுயர்பொதியப் பொகுட்டுழியிருந்தருள்
பரமாசிரியற் பற்பகல்வழிபட்
டரும்பெறலியல்பெறீஇப் பொருந்தியபன்னிரு
மாணவக்குழாத்து ணீணிலைகொளுவிய
அல்காப்பெருஞ்சீர்த் தொல்காப்பியமுனி
தற்பெயர்தோற்றி யற்புறத்தந்த
ஐந்திரநிறைந்த வியந்தகுநுண்பொருட்

டொன்மைசால்காப்பியத் துண்மரீ இப்பொதிவன
பாட்டுரைபெறுமேம் பாட்டுடைமையினில்
ஆனுக்கங்கன் யேனுள்வேண்ட லின்
சனகாபுரத்து ளினியபச்சால்பமை
சன்மதிதந்த வண்மைகூர்சிறப்பிற்
பவணந்தியுரவோன் றுவளறவகுத்த
நன னூலென் னு மந்நூறகிடந்தன
பொருளொருசேரத் தெருளுறச்சூழ்ந்து
செந்தமிழ்நாடே யன்றியுமாந்திர
மலாடுகெருநடங் குலாவுமிவ்வாதித்
தேததும்வழங்குந் திறன்றிறம்பாமை
யொருமொழிக்குரியவ ரன்றியும்விரவும்
ஐங்கிலியம்முத லறிஞருமேற்க
ஆரியந்திரவிட மாந்திரங்கருநடம்
ஒருமைங்கிலியத் துரைபொதுச்சிறப்பு
நடைநுதலியன வடைவிற்கற்பவர்
பல்வகைநலனறி மல்குமுணர்ச்சியின்
உள்ளக்கிளர்ச்சியுங் கொள்ளப்பெறுவன
நூன்மொழிபெயர்க்கும் வாய்மைக்கருவியுந்
தெள்ளியோர்பயுனடை செவ்வியுட்கொள்ளுபு
நந்தியம்பொருப்பி னந்தியும்பகலும்
அருகாவளங்கெழூஉம் வருவாய்த்திரிபிலாப்
பார்வயினின்பு நீள்வழியுதவுறூஉம்
பாற்பெயராற்றெழுக் கேற்பதெஞ்ஞான்றும்
எனைநாடவைபோ லாதிருமைக்கும்
பிறவிக்கெல்லை காணூஉ நிறைவுறக்
கல்லாப்புணரு நயனுடை நல்லோர்
பெட்புறுந்திருவின தொட்பமார்தொண்டை
நன்னுட்டிடைநீள் பன்மாண்புகழ்மை
மன்னுதெண்டிரைசூழ் சென்னையம்பதிக்க
ணிறைகொளும்புலமைத் துறைவந்தவர்தங்

குழுவகங்கவரா மகிழ்தலைசிறப்ப
ஒருதான்கண்ட வை பிறருந்தெரிகென
நீக்கமிலுள்ளத் தார்வநன்கூக்கத்
தண்டரும்பெயரிய பண்டையோர் நூல்வழிப்
பன்னுதொல்காப்பிய நன்னூலெனவும்
ஐந்திரபாணி நீயமெனவும்
சமரசபாடிய சித்தாந்தமெனவும்
வளம்பாடிலாத இளம்பூரணமும்
மெய்ச்சொலாற்பழிச்சு நச்சினார்க்கினியமும்
வானோர்மாண்பமை சேனவரையமும்
சங்கர நமச்சி வாயமுமென்றிவை
* ஐந்துரையுந்தொகுத் தின்புறவுண்மையின்
பூரணவிருத்தி யெனவும்பெயர்புனைந்
திந்நூலியற்றி யெழுதாவெழுத்திற்
பன்னூனெறியிற் பதித்துநல்கினன்;
வளைநீர்க்கருங்கடன் மறிதிரைகொழிக்கும்
உளைவுறீஇப்பணில முயிர்த்தநித்திலம்
கருங்கோட்டுப்புன்னை நறுங்கேழரும்பார்
குருகினமுயிர்க்கும் பரூஉமணியொண்கரு
இஃதஃதெனவயிர்ப் புறவயின் றெறூந்தொகூஉம்
நறைவார்சோலைப் பிறையாறெனுநகர்
வதிதருசோழ வேளாளமரபிற்
பதிதருதாண்டவ ராயவேள்பயந்த
நாட வருசுவி சேடசித்தாந்தி
செங்குவளையந்தார் தங்குமணி மார்பன்
நாமவேலைப் புவிநயக்கும்
சாமு வேலெனுந் தகைமையோனே.

இஃது இவாது இஷ்டராகிய புரசை அஷ்டாவதானம் சபாபதிமுதலியாரவர்கள் இயற்றியது.

---

* சங்கரநமச்சிவாயருரையில்சிவஞானமுனிவருரையுமிருக்கின்றதாகலின்.

சாத்துக் கவி.

இவை

புதுவைத் தமிழ்ப்புலவர்

பொன்னுசாமிமுதலியாரவர்கள்

இயற்றியவை.

ஓதநெடுங் கடலுலகோ ரறமுதனாற்பொருட்பயனூற்
றுய்வானன்றே,
ரோதியபல்லியற்றமிழ்நூற் கொள்கையொருங் குண
ர்வரிதென் றுளத்தூடுன்னி,
மேதகுதொல்காப்பியநன் னூலினைக்காட் டொடுவிரி
த்து விளங்கத்தந்தான்,
றூதுகுபூம் பொழிற்பிறைசைச் சாமுவேல்மன்னனெ
னுந் தமிழ்வல்லோனே.

இருநிலவனைப்பி னிருளறவிமைக்கு மிருசுடரெனத்
தமிழ் முனிவ,
னருட்கிடனாய புலவருட்டலைவ னரும்பவணந்தியிங்
கிருவர்,
தருமியற் றமிழொற் றுமையிடையிடைக்கண் டகும்
வகைவிரித்தினி தளித்தா,
னொருதனிக் கவிஞன் றூண்டவராய னுதவிய சாமு
வேல்மன்னே.

இவை

தரங்கபுரம்

சண்முகக்கவிராயரவர்கள்

இயற்றியவை.

நிறையாற்றைக் கடக்குனர்போ லிலக்கியமோடிலக்
கணமா நெடுநீர்நீந்தித்,
துறையாற்றி னொழுக்கியதொல் காப்பியநன் னூற்ப
யனைத் தொகுத்துமுந்நூன்,
முறையாற்றிப் பலபாடைச் சொற்குமிஃதொக்குமெ
ன முதற் பேர்தந்தான்,
பிறையாற்றில் வளர்சோழ குலச்சாமு வேலெனனும்
பெற்றியோனே.

ஆண்டவனுலருள் சமயத்தமைந்து பலபூசையெலா
மண்டவேமுற்றுந்,
தாண்டவராய்க் குரிசிற் றரங்கையொன்றும் பிறை
யாருந் தலஞ்சேர்சைவன்,
தூண்டவருட் சாமுவேற் காதலன்றொல் காப்பியத்தி
ன் கருத்துநன்னூற்,
றூண்டவரும் பொருட்பகுத்துந் தொகுத்தறி ஞரு
வப்ப விருந்துதவினனால்.

25th June, }
1858. }

JUST PUBLISHED No. I.

OF

"The Tamil Museum and Review of Oriental Philology,"

containing Part I. of the Tholcapya-Nunnool, or, A Comparative Reference Edition of the Tholcapyam and the Nunnool, the most ancient and the only standard systems of Grammatical literature in Tamil, with Examples, and Notes Critical and Explanatory. The first Appendix contains a complete Synopsis of the whole of the Dravidian Philology, and an account of the standard Authors and Commentators. The second Appendix comprises the hitherto unpublished Original Texts or Sootrums of the Second and Third Books of Tholcapyan, for the perusal of students as well as tutors. The entire work is designed to be hereafter amplified as a large Comparative Classical and Colloquial Commentary of Sanscrit, Tamil, and English Syntax, containing not only all the opinions of Native Writers, but also the best points of Beschi's, Rhenius', and Caldwell's Treatises, to aid those who, either in connection with educational institutions, or independently, may engage in translations, or in compilations of original works, for the benefit of the people of this country. **Price—Rupees 2-8-0.**

PROSPECTUS.

It is proposed that a Periodical, under the appellation of கிரந்தமந்தணகூடம் **Tamil Museum and Review of Oriental Philology,** shall be published from time to time according to the Editor's leisure, convenience and means. Each issue will be a number complete in itself, *i. e.* an entire book as in the instance above, of the Tholcapya-Nunnool. The Editor of the Tamil Museum proposes to publish in it, only those subjects that he is already in possession of, or which he has himself mastered. The articles therefore which may appear in its numbers are as follow.—viz: 1. Hitherto unpublished Manuscripts. 2. Translations from English and Sanscrit. 3. Original Essays styled தமிழ்மஞ்சரி in imitation of the British Essayists. 4. Philological Criticisms or Comparative Syntax of the English Tamil and Sanscrit languages. 5. A Vocabulary of Idiomatic Compounds. 6, Tamil Version of the Rig-veda. 7. A Review of the Tamil Authors Ancient and Modern. 8. Offerings to Children and School Boys. 9. A few Medical works. 10. Comparative Readings of Portions of the three versions of the Bible by Percival,

Rhenius and Fabricius, with observations. 11. Shastrology or a Collection of Hindu superstitions. 12. A Vocabulary of proper names. N. B. This will simply contain some hundreds of names with a few remarks and cursory explanations, having been left by the Editor uncompleted, since the appearance of a Prospectus of a Classical Dictionary from another quarter.

தொல்காப்பியநன்னூல்.

BOOK 1.

எழுத்ததிகாரம் ORTHOGRAPHY.

CHAPTER I.—நூன்மரபு.

OF LETTERS IN GENERAL AND THE ELEMENTARY PRINCIPLES OF LANGUAGE.

1. எழுத்தெனப்படுப, அகரமுதல், னகரஇறுவாய்முப்பஃதென்ப, சார்ந்துவரல் மரபின் மூன்றலங்கடையே. Nunnool எழுத்தியல். Sootrum 1, 3, 4. Ex. அ-ஆ-இ-ஈ-உ-ஊ-எ-ஏ-ஐ-ஒ-ஒ-ஔ—க்-ங்-ச்-ஞ்-ட்-ண்-த்-ந்-ப்-ம்-ய்-ர்-ல்-வ்-ழ்-ள்-ற்-ன்.

2. அவைதாம்; குற்றியலிகரம் குற்றியலுகரம், ஆய்தமென்ற முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன. Nunnool எழுத்தியல். Sootrum 5, 6. See the First Seven Sootrums of the next Chapter.

3. ¶ அவற்றுள்; அ இ உ எ ஒ என்னும் அப்பாலைந்தும், ஓரளபிசைக்குங்குற்றெழுத்தென்ப. Nunnool எழுத்தியல். Sootrum 9.

4. ஆ ஈ ஊ ஏ, ஐ ஓ ஔ என்னும் அப்பாலேழும், ஈரளபிசைக்கும் நெட்டெழுத்தென்ப. Nunnool எழுத்தியல் Sootrum 10.

5. மூவளபிசைத்தல் ஓரெழுத்தின்றே. A remark up n Quantity.

6. நீட்டம்வேண்டின் அவ்வளபுடைய, கூட் டியெழூஉதல் என்மனார்புலவர். Nunnool எழுத்தியல். Sootrums 36, 37.

7. கண்ணிமைநொடியென அவ்வேமாத்திரை, நுண்ணிதின் உணர்ந்தோர்கண்டவாறே. Nun. எழுத். Soot. 44, 45. Definition of மாத்திரை.

8. ¶ ஔகாரஇறுவாய்ப், பன்னீரெழுத்தும் உயிரெனமொழிப. Nunnool எழுத்தியல். Sootrum 8.

9. னகாரவிறுவாய்ப், பதினெண்ணெழுத்தும் மெய்யெனமொழிப. Nunnool எழுத்தியல். Sootrum 8.

10. மெய்யோடியையினும் உயிரியல்திரியா. Nun. எழுத். Soot. 34. A remark upon Syllables or the Combination of vowels and consonants.

11. ¶ மெய்யின் அளபே அரையெனமொழிப. Nun. எழுத். Soot. 44.

12. அவ்வியல்நிலையும் ஏனைமூன்றே. Ex. கேண்மியா, நாகு, எஃகு. Nunnool எழுத்தியல். Sootrum 44.

13. அரையளபுகுறுகல் மகரமுடைத்தே, இசையிடன் அருகும் தெரியுங் காலை. Nunnool எழுத்தியல். Sootrum 41. Ex. போன்ம், வரும்வண்ண க்கன்.

14. உட்பெறுபுள்ளி யுருவாகும்மே. Ex. ப-ம. An unnecessary Rule as to the formation of certain two characters.

15. ¶ மெய்யின் இயற்கைபுள்ளியொடுநிலையல். Nun. எழுத். Soot. 34.

16. எகரஒகரத் தியற்கையும்அற்றே. Nunnool எழுத்தியல். Sootrum 43. Ex. எ-ஒ.

17. ¶ புள்ளியில்லா எல்லாமெய்யும், உருஉருவாகி அகரமொடுயிர்த்த லும், ஏனையுயிரோடுருவுதிரிந்துயிர்த்தலும், ஆயீரியல உயிர்த்தலாறே. Nunnool எழுத்தியல். Sootrum 34. Definition of Vowel-Consonants.

18. மெய்யின்வழிய துயிர்தோன்றுநிலையே. Nunnool எழுத். Soot. 34.

19. ¶ வல்லெழுத்தென்ப க ச ட த ப ற. Nunnool எழுத். Soot. 13.

20. மெல்லெழுத்தென்ப ங ஞ ண ந ம ன. Nunnool எழுத். Soot. 14.

21. இடையெழுத்தென்ப ய ர ல வ ழ ள. Nunnool எழுத். Soot. 15.

22. ¶ அம்மூவாறும் வழங்கியல்மருங்கின், மெய்ம்மயங்குடனிலை தெ ரியுங்காலை. Nunnool எழுத்தியல். Sootrum 55. Letters capable of going together in the middle of a word.

23. ட ற ல ளவென்னும் புள்ளிமுன்னர்க், க ச பவென்னு மூவெழுத் துரிய. Nunnool எழுத்தியல். Sootrum 58.

24. அவற்றுள்; லளஃகான்முன்னர் யவவுந்தோன்றும். Nunnool எ ழுத்தியல். Sootrum 62.

25. ங ஞ ண ந ம ன எனும்புள்ளிமுன்னர்த், தத்தம்இசைகள் ஒத்தன நிலையே. Nunnool எழுத்தியல். Sootrum 56, 57, 59.

26. அவற்றுள்; ணனகான்முன்னர்க், கசஞபமயவவ் வேழும் உரிய. Nunnool எழுத்தியல். Sootrum 59.

27. ஞநமவ, என்னும்புள்ளிமுன்னர், யஃகான்நிற்றல்மெய்பெற்றன்றே. Nunnool எழுத்தியல். Sootrum 60.

28. மஃகான்புள்ளிமுன் வவ்வுந்தோன்றும். Nunnool எழுத்தியல். Sootrum 60. See 35, of புள்ளிமயங்கியல் following. Ex. சம்வற்சரம்.

29. யரழ என்னும் புள்ளிமுன்னர், முதலாகெழுத்து ஙகரமொடுதோன் றும். Nunnool எழுத்தியல். Sootrum 64. Not in the Nunnool.

30. மெய்ந்நிலைசுட்டின் எல்லாவெழுத்தும், தம்முற்றும்வரூஉம்ரழவ

லங்கடையே. Nunnool எழுத்தியல். Sootrum 55. Ex. காக்கை, எங்ஙனம், பச்சை, மஞ்ஞை, புட்டை, மண்ணை, தத்தை, வெந்நெய், அப்பு, அம்மை, வெய்யர், எல்லி, எவ்வி, கள்ளி, கொற்றி, கன்னி, போன்ம், மருண்ம். See also Nunnool எழுத்தியல். Sootrums 64, 65.

31. ¶ அ இ உ அம்மூன்றுஞ்சுட்டு. Nunnool எழுத்தியல். Sootrum 11. Ex. அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன், அவன், அவள். அது, இவன், இவள், இது, அங்கே, இங்கே, &c. அவண், இவண், ஆங்கு, அங்ஙனம், ஆண்டு, ஈண்டு, &c.

32. ¶ ஆ எ ஓ அம்மூன்றும் வினா. Nunnool எழுத்தியல். Sootrum 12. Ex. உண்கா, உண்கே, உண்கோ. Also அவனா, சொன்னேனா, எவன், கொற்றனே, நானோ, சொன்னேனோ. &c.

33. அளபிறந்துயிர்த்தலும் ஒற்றிசைநீடலும், உளவெனமொழிப இசையொடு சிவணிய, நரம்பின்மறைய என்மனார்புலவர். Nunnool எழுத்தியல். Sootrum 46. An Observation on Quantity connected with music. See Sootrum 17. மொழிமரபு. N. B. The Subdivisional parts given in the Second Soot. of the Nunnool எழுத். may be collected from the system of arrangement of the Chapters of Tholcapyan's Orthography.

CHAPTER II.—மொழிமரபு.

OF LETTERS AS CONSTITUENT PARTS OF WORDS.

1. ¶ குற்றியலிகரம் நிற்றல்வேண்டும், யாவென்சினைமிசை உரையசைக்கிளவிக், காவயின்வரூஉம் மகரமூர்ந்தே. Nun. எழுத். Soot. 38. See also 1st and 2d Soots, Chapter 1. Ex. கேண்மியா, சென்மியா.

2. புணர்இயல் நிலையிடைக் குறுகலுமுரித்தே, உணரக்கூறின் முன்னர்த்தோன்றும். Nunnool எழுத்தியல். Sootrum 38. Tholcapyam குற்றி. Sootrum 5. These two Sootrums are put into one by Pavananti.

3. ¶ நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீற்றும், குற்றியலுகரம் வல்லாறூர்ந்தே. Nun. எழுத்தியல். Soot. 39. Thol. குற்றி. Sootrum 1.

4. இடைப்படின்,குறுகும் இடனுமாருண்டே,கடப்பாடறிந்த புணரியலான. Tholcapyam குற்றி. Sootrum 4. Ex. செக்குக்கணை.

5. ¶ குறியதன்முன்னர் ஆய்தப்புள்ளி, உயிரொடுபுணர்ந்தவல்லாறன்மிசைத்தே. Nun. எழுத். Soot. 35. Ex. எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு, அஃது, இஃது, உஃது, அஃகம், அஃகாமை, அஃகி.

6. ஈறியன்மருங்கினும் இசைமைதோன்றும். Nun. எழுத். Soot. 42. Tholcapyam புள்ளி. Sootrums 74, 104. Ex. கஃறீது, முஃடீது.

7. உருவினும் இசையினும் அருகித்தோன்றும், மொழிக்குறிப்பெல்லாம் எழுத்தின்இயலா, ஆய்தமலகாக் காலையான. A rule relating to Prosody. Ex. கஃஃறென்னும், சுஃஃறென்னும்.

8. ¶ குன்றிசைமொழிவயின் னின்றிசைநிறைக்கும், நெட்டெழுத்திம்பர் ஒத்தகுற்றெழுத்தே. Nunnool எழுத்தியல். Sootrum 36. Thol. நூன்மரபு. Soot. 6. Also a rule for Prosody. Ex. ஆஅ, ஈஇ, ஊஉ, &c.

9. ஐ ஒளவென்னும் ஆயீரெழுத்திற் கிகரஉகரம் இசைநிறைவாகும். Nunnool எழுத்தியல். Sootrum 16. Ex. ஐஇ; ஔஉ.

10. ¶ நெட்டெழுத்தேழே ஓரெழுத்தொருமொழி. Nunnool பதவியல். Sootrum 2. Ex. ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-கௌ.

11. குற்றெழுத்தைந்தும் மொழிநிறைபிலவே. Nunnool எழுத்தியல். Sootrum 53. Nunnool பதவியல். Sootrum 2.

12. ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொருமொழி, இரண்டிறந்திசைக்கும்தொடர்மொழி உளப்பட, மூன்றேமொழிநிலை தோன்றியநெறியே. Nun. பதவியல். Sootrums 1, 2. Read the comments upon this Sootrum by Siva Gnanamoonivan. Compare Sootrum 2. பெயரியல். Nunnool.

13. ¶ மெய்யின்இயக்கம்அகரமொடுசிவணும். Elakkanakotoo Pref. p. 8.

14. ¶ தம்மியல்கிளப்பின் எல்லாவெழுத்தும், மெய்ந்நிலைமயக்கம் மானமில்லை. Nunnool எழுத்தியல். Sootrums 54, 55.

15. யரழவென்னும்மூன்றுமொற்றக், கசதபஙஞநமஈரொற்றுரும். Nunnool எழுத்தியல். Sootrum 64. Ex. வேய்க்க, வாய்ச்சி, பாய்த்தல், வாய்ப்பு : பீர்க்கு, நேர்ச்சி, வார்த்தல், ஆர்ப்பு : வாழ்க்கை, தாழ்ச்சி, தாழ்த்தல் தாழ்ப்பு : காய்ங்கனி, தேய்ஞ்சது, காய்ந்தனம், காய்ம்புறம் : நேர்ங்கல், நேர்ஞ்சிலை, நேர்ந்திலை, நேர்ம்புறம் : Also வாழ்ந்தனம், தாழ்ங்குலை, தாழ்ஞ்சினை, வீழ்ம்படை.

16. அவற்றுள் ; ரகார ழகாரம் குற்றொற்றாகா. Nun. எழுத். Soot. 64. Ex. கார், வீழ் : கரு, மழு: புகர், புகழ் : These are contraries of the subject of the Sootrum, and shew that there cannot be கர், கழ், &c.

17. குறுமையும் நெடுமையும் அளவிற்கோடலின், தொடர்மொழி யெல்லாம் நெட்டெழுத்தியல. Ex. வருவர்கொல்வயங்கிழாஅய், கடியவேகனங்குழாஅய், &c. Compare Soot. 33. நூன்மரபு. Not in the Nunnool.

18. செய்யுளிறுதிப்போலிமொழிவயின், னகாரமகாரம் ஈரொற்றுரும். Nunnool எழுத்தியல். Sootrum 65. Ex. போன்ம்.

19. னகாரைமுன்னர் மகாரங்குறுகும். Nun. எழுத். Soot. 41. Ex. போன்ம், மருண்ம். These are instances of abbreviation of the quanty of ம்.

20. மொழிப்படுத்திசைப்பினும், தெரிந்தவேறிசைப்பினும், எழுத்தியல் திரியா என்மனார்புலவர். Nun. எழுத். Soot. 72. Ex. அல், இல், உண்: ஆல், ஈர், ஊர் : கால், சீர், சூல் : கடம், கடாம், உடையான், திருவாரூர்,

அகத்தியனார். &c. The mute consonants in these examples though to be reckoned in Orthography have no intrinsic value in Prosody.

21. அகர இகரம் ஐகாரமாகும். Nunnool எழுத்தியல். Sootrum 70.

22. அகர உகரம் ஔகாரமாகும். Nunnool எழுத்தியல். Sootrum. 70.

23. அகரத்திம்பர்யகரப்புள்ளியும்,ஐயெனெடுஞ்சினைமெய்பெறத்தோன்றும். Nunnool எழுத்தியல். Soot. 68, 70. Ex. ஐவனம், அய்வனம்.

24. ஓரளபாகும்இடனுமாருண்டே, தேருங்காலைமொழிவயினான. Ex. ஐப்பசி, இடையன், கைப்பை. Relates to abbreviate ஐ.

25. இகர யகரம் இறுதிவிரவும். Ex. நாய்; நாஇ. Obsolete.

26. ¶ பன்னீருயிரும்மொழிமுதலாகும். Nunnool எழுத்தியல். Sootrum 47. Vowel-Initials.

27. உயிர்மெய்யல்லன மொழிமுதலாகா. See Soot. 4, 5. புணரியல்.

28. ¶ கதநபமவெனும் ஆவைந்தெழுத்தும், எல்லாஉயிரொடுஞ்செலவுமார்முதலே. Nun. எழுத். Soot. 47. See the table of vowel consonants.

29. சகரக்கிளவியும்அவற்றோரற்றே,அஐஔவெனு மூன்றலங்கடையே.

N. B. ச has examples in modern Tamil as சறுக்கு,சையெனல்,சௌரியம்.

30. ¶ உஊஒஓ என்னுநான்குயிர், வ என்னெழுத்தொடுவருதலில்லை. Nunoool எழுத்தியல். Sootrum 48.

31. ஆஎ,ஒஎனுமூவுயிர் ஞகாரத்துரிய. Nunnool எழுத்தியல். Soot.50.

32. ஆவோடல்லது யகரமுதலாது. Nunnool எழுத்தியல். Sootrum 47. Ex. யாடு, யானை.

33. முதலாவென தம்பெயர்முதலும். Nunnool எழுத்தியல். Sootrum 66. Ex. ஙக்களைந்தான், டப்பெரிது, &c.

34. குற்றியலுகரம் முறைப்பெயர்மருங்கின், ஒற்றியநகரமிசை நகரமொடுமுதலும். Ex. நுந்தை.

35. முற்றியலுகரமொடுபொருள்வேறுபடாஅ, தப்பெயர்மருங்கினிலையியலான. Pronounce சாது and நுந்தை, and observe the protrusion of the lips. But நுந்தாய் is முற்றியலுகரம்.

36. ¶ உயிர் ஔஎஞ்சிய இறுதியாகும். Nunnool எழுத்தியல். Sootrum 52. Vowel-Finals.

37. கவ்வோடியையின் ஔவுமாகும். Nunnool எழுத்தியல். Sootrum 53. Ex. கௌ, வௌ.

38. எ எனவருமுயிர் மெய்யீறாகாது. Nunnool எழுத்தியல். Soot. 53.

39. ஒவ்வும்அற்றே நவ்வலங்கடையே. Nunnool எழுத்தியல். Sootrum 53. Ex. நொ அலையனின்னாட்டை நீ.

40. எ ஒ எனுமுயிர் ஞகாரத்தில்லை. Ex. உரிஞ, உரிஞா, உரிஞி,உரிஞீ, உரிஞு, உரிஞூ.

41. உஊகாரம் நவவொடுநவிலா. Ex. பொருந், நா, நீ, நே, நை, நொ, Also பொருநை, உவ, வே, உவா, செவ்வி, வீ, வை ஒருவ, ஒருவா, ஒருவி, ஒருவீ, ஔவை; Also கதவு, தரவு, புணர்வு, குலவு, நொவ்வு, நுகர்வு. These latter are modern words not in use in the days of Tholcapyan.

42. உச்சகாரம் இருமொழிக்குரித்தே. Ex. உசு, An insect causing rottenness; முசு, a species of Quadrumana. பசு being Sanscrit is not included.

43. உப்பகாரம் ஒன்றெனமொழிப, இருவயின் நிலையும் பொருட்டாகும்மே. Ex. தபு. Many in modern days, as படிப்பு, முடிபு, &c.

44. எஞ்சிய எல்லாம் எஞ்சுதலிலவே. Ex. வருக-புகா-வீக்கி-புகீ-செரு-புகூ-ஈங்கே-மங்கை-எங்கோ: கட்ட-கடா-மடி-மடீ-மடு-படூ-படை: மண்ண-எண்ணு-கண்ணி-உண்ணீ-நணு-நண்ணூ-பண்ணே: அத-புதா-பதி-வதீ-அது-கைதூ-தந்தை-அந்தோ: நம-நென்மா-அம்மி-மீ-செம்மு-கொண்மூ-யாமை-காத்தும்மவம்மோ: செய-காயா-கொய்யூ-ஐயை-ஐயோ: வர-தாரா-பரி-ஞரீ-கரு-வெரூ-நாரை: சில-பலா-வலி-வலீ-வலு-கொல்லூ-வல்லே-கலை: தொழ-விழா-நாழி-வழீ-மழு-எழூ-தாழை: உள-உள்ளா-வெள்ளி-குளீ-உளு-எள்ளூ-களை: கற்ற-கற்று-உறி-உறீ-மறு-உறூ-கற்றை-என்றோ: நன-கனு-வன்னி-துனீ-முன்னு-துன்னூ-என்னே-அன்னை-அன்னோ:

45. ¶ ஞணநமனயரலவழள என்னும், அப்பதினொன்றே புள்ளியிறுதி. Nunnool எழுத்தியல். Sootrum 52. Consonant-Finals.

46. உச்சகாரமொடு நகாரஞ்சிவணும். Ex. பொருந், வெரிந்.

47. உப்பகாரமொடு ஞகாரையும் அற்றே, அப்பொருளிரட்டா திவணையான. Ex. உரிஞ்.

48. வகரக்கிளவி நான்மொழியீற்றது. Ex. அவ், இவ், உவ், and தெவ்.

49. மகரத்தொடர்மொழி மயங்குதல்வரைந்த, னகரத்தொடர்மொழி ஒன்பஃதென்ப, புகரறக்கிளந்த அஃறிணைமேன. Nunnool எழுத்தியல். Sootrum 67. Ex. எகின், செகின், விழன், பயின், குயின், அழன், புழன், கடான், வயான். நிலம்,நிலன்; பிலம்,பிலன்; குலம்,குலன்; வளம் வளன்.

CHAPTER III.—பிறப்பியல்.

ARTICULATION OF LETTERS.

1. உந்திமுதலாமுந்துவளிதோன்றித், தலையினுமிடற்றினும் நெஞ்சினும்நிலைஇப், பல்லுமிதழுநாவுமூக்கும், அண்ணமுமுளப்பட வெண்முறைநிலையான், உறுப்புற்றமைய நெறிப்படநாடி, எல்லாவெழுத்துஞ் சொல்லுங்காலைப், பிறப்பினாக்கம்வேறுவேறியல, திறப்படத்தெரியுங் காட்சியான. Nunnool எழுத்தியல். Sootrum 19. Pronunciation of letters.

2. ¶ அவ்வழி ; பன்னீருயிருந்தந்நிலைத்திரியா, மிடற்றுப்பிறந்தவளியி ன்இசைக்கும். Nunnool எழுத்தியல். Sootrum 20.

3. அவற்றுள், அஆ ஆயிரண் டங்காந்தியலும். Nun. எழுத். Soot. 21.

4. இஈஎஏஐயென இசைக்கும், அப்பாலைந்தும்அவற்றோரன்ன: அவை தாம்,அண்பன்முதல்நாவிளிம்புறலுடைய. Nunnool எழுத். Soot. 22.

5. உஊஒஓ ஒளவெனவிசைக்கும், அப்பாலைந்துமிதழ்குவிந்தியலும். Nunnool எழுத்தியல். Sootrum 23.

6. தத்தந்திரிபே சிறியவென்ப. Deviations. Nunnool எழுத்தியல். Sootrum 33.

7. ¶ ககார ஙகாரம் முதனாவண்ணம். Nunnool எழுத். Soot. 24.

8. சகார ஞகார மிடைநாவண்ணம். Nunnool எழுத். Soot. 24.

9. டகார ணகாரம் நுனிநாவண்ணம். Nunnool எழுத். Soot. 24.

10. அவ்வாறெழுத்தும் மூவகைப்பிறப்பின. An Observation on the above three Sootrums.

11. ¶ அண்ணநண்ணிய பன்முதன்மருங்கின், நாநுனிபரந்துமெய்யுற வொற்றத், தாமினிதுபிறக்கும் தகாரநகாரம். Nunnool எழுத். Soot. 25.

12. அணரிநுனிநா அண்ணமொற்ற, றஃகா னஃகானு மிரண்டும்பிற க்கும். Nunnool எழுத்தியல். Sootrum 31.

13. நுனிநாவணரி யண்ணம்வருட, ரகாரழகாரமா யிரண்டும்பிறக்கும்' Nunnool எழுத்தியல். Sootrum 28.

14. நாவிளிம்புவீங்கி யண்பன்முதலுற, ஆவயினண்ணம் ஒற்றவும் வரு டவும், லகாரளகாரமா யிரண்டும்பிறக்கும். Nunnool எழுத். Soot. 29.

15. இதழியைந்து பிறக்கும் பகாரமகாரம். Nunnool எழுத். Soot. 26.

16. பல்லிதழியைய வகாரம் பிறக்கும். Nunnool எழுத். Soot. 30.

17. அண்ணஞ்சேர்ந்த மிடற்றெழுவளியிசை, கண்ணுற்றடைய யகாரம் பிறக்கும். Nunnool எழுத்தியல். Sootrum 27.

18. ¶ மெல்லெழுத்தாறும் பிறப்பினாக்கம், சொல்லியபுள்ளிநிலையின வாயினும், மூக்கின்வளியிசை யாப்புறத்தோன்றும். Nun.எழுத்.Soot.20.

19. சார்ந்துவரினல்லது தமக்கியல்பிலவெனத், தேர்ந்துவெளிப்படுத் த வேனைமூன்றும், தத்தஞ்சார்பிற் பிறப்பொடுசிவணி,ஒத்தகாட்சியில்தம் மியல்பியலும். Nunnool எழுத்தியல். Sootrum 32.

20. ¶ எல்லாவெழுத்தும் வெளிப்படக்கிளந்து, சொல்லியபள்ளி யெழு தருவளியிற், பிறப்பொடுவிடுவழி யுறழ்ச்சிவாரத், தகத்தெழுவளியிசை ய ரில்தபநாடி, யளபிற்கோடலந்தணர்மறைத்தே, அஃதிவணுவலா தெழுந்து புறத்திசைக்கும்,மெய்தெரிவளியிசை யளபுநுவன்றிசினே.Nun.எழுத்.33.

N. B. Pronunciation of ordinary Letter-sounds as distinguished from Vedik sounds.

CHAPTER. IV.—புணரியல்.

PRINCIPIA OF COMBINATION AND TERMINOLOGY.

N. B. Combination includes not only Sandhi but also Syntax. Tholcapyan has in this Chapter laid down all the fundamental and preliminary Rules of புணர்ச்சி together, in one view. The following 40 Sootrums are abridged in the Nunnool by Pavananti into 14; of which, உயிரீற்றுப்புணரியல் has 7 as introductory rules, மெய்யீற்றுப் புணரியல் 2, and உருபுபுணரியல் 5.

1. மூன்றுதலையிட்ட முப்பதிற்றெழுத்தின், இரண்டுதலையிட்ட முதலாகிருபஃ, தறுநான்கீறொடுநெறிநின்றியலும், எல்லாமொழிக்கும் இறுதியும்முதலும், மெய்யே உயிரொன் றுயீரியல. Nunnool உயிரீ. 1. Ex. மரம், இலை, ஆல், விள.

2. அவற்றுள் : மெய்யீறெல்லாம் புள்ளியொடுநிலையல. Thol. நூன் மரபு. 15. Ex. பொன், மெய், வேர், &c. Hence மெய்ம்முதலெல்லாமுயிர்மெய்யாகும். Ex. காரியம், காதம். &c.

3. குற்றியலுகரமும் அற்றெனமொழிப. Ex. நாகரிது. See 1st Sootrum மெய்யீற்றுப்புணரியல் Nunnool.

4. உயிர்மெய்யீறும் உயிரீற்றியற்றே. Nun. உயிரீ.1. Ex. விள, பலா &c.

N. B. On this Sootrum depends the following உயிர்மயங்கியல், the least complicated portion of புணர்ச்சி. The contrary of this Sootrum உயிர்மெய்ம்முதல்கண் மெய்ம்முதலியல, is also true.

5. ¶ உயிரிறுசொல்முன் உயிர்வருவழியும், உயிரிறுசொன்முன் மெய்வருவழியும், மெய்யிறுசொன்முன் உயிர்வருவழியும், மெய்யிறுசொன்முன் மெய்வருவழியுமென், றிவ்வென அறியக் கிளக்குங்காலை, நிறுத்தசொல்லே குறித்துவருகிளவியென், றுயீரியல புணர்நிலைச்சுட்டே. Nun. உயிரீ. 1.

6. அவற்றுள்; நிறுத்த சொல்லின் ஈறுகெழுத்தொடு, குறித்துவருகிளவி முதலெழுத்தியையப், பெயரொடு பெயரைப் புணர்க்குங்காலும், பெயரொடுதொழிலைப் புணர்க்குங்காலும், தொழிலொடுபெயரைப் புணர்க்குங்காலும், தொழிலொடு தொழிலைப் புணர்க்குங்காலும், மூன்றேதிரிபிடன் ஒன்றே இயல்பென, ஆங்கந்நான்கே மொழிபுணரியல்பே. Nunnool உயிரீ. 1, 3, 4. General definitions of புணர்ச்சி.

7. ¶ அவைதாம்; மெய்பிறிதாதல் மிகுதல் குன்றலென், றிவ்வென மொழிப திரியுமாறே. Nunnool உயிரீ. 4. The three Mutations.

8. நிறுத்தசொல்லும் குறித்துவருகிளவியும், அடையொடுதோன்றினும் புணர்நிலைக்குரிய. Ex. பதினுயிரத்தொன்று, உண்டசாத்தன் வந்தான் : Not in the Nunnool. See Thol. வேற்றுமையியல். Sootrum 6.

9. மரு இன்தொகுதி மயங்கியல்மொழியும், உரியவையுளவே புணர்நிலைச் சுட்டே. Corruptions and contractions to be brought under rules of சந்தி. See 10th Sootrum பெயரியல். Nunnool.

10. ¶ வேற்றுமைகுறித்த புணர்மொழிநிலையும், வேற்றுமைஅல்வழிப் புணர்மொழிநிலையும், எழுத்தே சாரியை ஆயிருபண்பின், ஒழுக்கல்வலிய புணருங்காலை. Nunnool உயிரீற்றுப்புணரியல். 2.

11. ஐ ஒடு கு இன் அது கண் ணென்னும், அவ்வாறென்பவேற்றுமையுருபே. Nunnool உயிரீற்றுப்புணரியல். 2.

12. வல்லெழுத்துமுதலிய வேற்றுமையுருபிற், கொல்வழி ஒற்றிடைமிகுதல்வேண்டும். Ex. மணிக்கு, மணிக்கண், தீக்கு, தீக்கண், மனைக்கு, மனைக்கண். This rule is out of place here. See however 33, 41, 18, of உயிர்மயங்கியல். Also, Nunnool உருபுபுணரியல், 3.

13. ஆறனுருபின் அகரக்கிளவி, ஈறுககரமுனைக் கெடுதல்வேண்டும். See 19th Sootrum தொகைமரபு. Ex. தமது, நமது, எமது, &c. Not தமத்து, நமத்து, எமத்து.

14. ¶ வேற்றுமைவழிய பெயர்புணர்நிலையே. Nunnool உருபுபுணரியல். 2. The origin of உருபியல். Tholcapyam வேற்று. Sootrum 8.

15. உயர்திணைப்பெயரே அஃறிணைப்பெயரென், றாயிரண்டென்ப பெயர் நிலைச்சுட்டே. Nunnool பெயரியல் 2, 6. Also, Nunnool எழுத்தியல் 7; and the whole of the பதவியல். Tholcapyam கிளவியாக்கம் 1.

16. அவற்றுவழிமருங்கிற் சாரியைவருமே. Nunnool 4, உருபுபுணரியல். Thol. புணரியல், 30.

17. ¶ அவைதாம்; இன்னேவற்றே அத்தே அம்மே, ஒன்னே ஆனே அக்கே இக்கே, அன்னென்கிளவி உளப்படப்பிறவும், அன்னவென்ப சாரியைமொழியே. Nunnool உருபுபுணரியல், 5.

18. அவற்றுள், இன்னின் இகரம் ஆவினிறுதி, முன்னர்க்கெடுதலுரித்துமாகும். Ex. ஆனை, ஆவினை; மானை, மாவினை.

19. அளவாகுமொழிமுதல் நிலைஇயஉயிர்மிசை, னஃகான்றஃகான்ஆகியநிலைத்தே. Ex. பதிற்றகல், பதிற்றுழக்கு, பதிற்றெழுத்து, பதிற்றடுக்கு.

20. வஃகான்மெய்கெடச்சுட்டுமுதலைம்முன், அஃகான்நிற்றல் ஆகியபண்பே. Nunnool உருபுபுணரியல் 11. Ex. அவையற்றை, இவையற்றை, உவையற்றை.

21. னஃகான்றஃகான் நான்கனுருபிற்கு. Ex. விளவிற்கு, கோஒற்கு, ஒருபாற்கு, அதற்கு, &c.

22. ஆனின் னகரமும் அதனோரற்றே, நாண்முன்வரூஉம் வன்முதற்றொழிற்கே. Ex. பரணியாற்கொண்டான்.

23. அத்தின்அகரம் அகரமுனையில்லை. Nunnool உருபுபுணரியல். 13.

24. இக்கின்இகரம் இகரமுனைஅற்றே. Ex. ஆடிக்குச்சென்றான்.

25. ஐயின்முன்னரும்அவ்வியனிலையும. Ex.சித்திரைக்குக்கொண்டான்

26. எப்பெயர்முன்னரும் வல்லெழுத்துவருவழி, அக்கினிறுதிமெய்ம் மிசையொடுங்கெடுமே, குற்றியலுகரம் முற்றத்தோன்றுது. Ex. குன்றக் கூகை,மன்றப்பெண்ணை, ஈமக்குடம், கம்மக்குடம், &c. See Sootrum 3. Also புள்ளிமயங்கியல். 15.

27. அம்மின் இறுதி கசத்க்காலே, தன்மெய்திரிந்தஙஞநவாகும். Ex. புளியங்கோடு, புளியஞ்செதிள், புளியந்தோல்.

28. மென்மையுமிடைமையும் வருஉங்காலே, இன்மைவேண்டு மென்மனூர்புலவர். Ex. புளியஞெரி, புளியயாழ்.

29. இன்னெனவருஉம்வேற்றுமையுருபிற், கின்னென்சாரியையின்மை வேண்டும். Ex. மலையினினிழிந்தான் is not elegant.

30. பெயரும்தொழிலும்பிரிந்தொருங்கிசைப்ப, வேற்றுமையுருபு நிலைபெறுவழியும், தோற்றம்வேண்டாத்தொகுதிக்கண்ணும், ஒட்டுதற்கொழுகிய வழக்கொடுசிவணிச், சொற்சிதர்மருங்கின் வழிவந்துவிளங்கா, திடைநின்றியலும்சாரியையியற்கை, உடைமையும்இன்மையும்ஒடுவயினொக்கும். Nunnool உருபுபுணரியல். 4. Ex. பூவொடுவிரிந்தகூந்தல், பூவினொடுவிரிந்தகூந்தல்.

31. அத்தேவற்றேஆயிருமொழிமேல், ஒற்றுமெய்கெடுதல்தெற்றென்றற்றே, அவற்றுமுன்வருஉம் வல்லெழுத்துமிகுமே. Ex. கலத்துக்குறை, அவற்றுக்கோடு: வெயிலத்துச்சென்றூர், இருளத்துக்கொண்டான்

32. ¶ காரமும்கரமும் கானொடுசிவணி, நேரத்தோன்றும் எழுத்தின்சாரியை. Nunnool எழுத்தியல், 71.

33. அவற்றுள்; கரமுங்கானும் நெட்டெழுத்திலவே. Nunnool எழுத்தியல், 71.

34. வரன்முறைமூன்றும் குற்றெழுத்துடைய. Nunnool எழுத். 71.

35. ஐகார ஔகாரம் கானொடுந்தோன்றும். Nunnool எழுத். 71.

36. ¶ புள்ளியீற்றுமுன் உயிர்தனித்தியலாது, மெய்யொடுஞ்சிவணும் அவ்வியல்கெடுத்தே. Nunnool மெய்யீற்றுப்புணரியல், 1. On this depends the புள்ளிமயங்கியல் of Tholcapyam.

37. மெய்யுயிர்நீங்கில் தன்னுருவாகும். Nunnool மெய்யீற்றுப். 2.

38. ¶ எல்லாமொழிக்கும் உயிர்வருவழியே, உடம்படுமெய்யின் உருபுகொளல்வரையார். Nunnool உயிரீற்றுப்புணரியல், 12.

39. ¶ எழுத்தோரன்ன பொருள்தெரிபுணர்ச்சி, இசையிற்றிரிதல்நிலையபண்பே. Nunnool போது. 40. Ex. செம்பொன்பதின்றொடி, செம்பருத்தி, குறும்பரம்பு, நாகன்றேவன்போத்து, குன்றேறுமா.

40. அவைதாம்; முன்னப்பொருளபுணர்ச்சிவாயின், இன்னவென்னுமெழுத்துக்கடனிலவே

N. B. This Chapter contains general Rules introductory to the suc-

ceeding Chapters of the Tholcapyam, which are subdivisions of the grand head புணர்ச்சி herein treated.

CHAPTER V.—தொகைமரபு.

A COMPENDIUM OF COMBINATION OR AN ABSTRACT OF THE MOST GENERAL AND COMPREHENSIVE RULES OF SANDHI.

N. B. The Commentators of the Nunnool designate தொகைமரபு by the term பொதுப்புணர்ச்சி. The following 30 Sootrums have been abridged by Pavananti into 7 Rules. See from the 8th to the 14th of his உயிரீற்றுப்புணரியல். All the Rules of the next four Chapters are particular, and class under one or other of these Sootrums of தொகைமரபு. This is therefore a sort of general storehouse from which future particulars are supplied; the foregoing புணரியல் forming but an Introductory Preface explanatory of terms necessary for the understanding of the present Chapter and the four Chapters following.

1. ¶ க ச த ப முதலியமொழிமேல்தோன்றும், மெல்லெழுத்தியற்கை சொல்லியமுறையான், ங ஞ ந ம என்னும் ஒற்றாகும்மே, அன்னமரபின் மொழிவயினான. Ex. விளங்கோடு: உயிர்மயங்கியல் 15. மரங்குறிது: புள்ளிமயங்கியல் 19. This first Sootrum is equally applicable to both the உயிர்மயங்கியல் and புள்ளிமயங்கியல் following. The following Sootrums admit more or less of like application.

2. ¶ ஞ ந ம ய வ எனுமுதலாகுமொழியும், உயிர்முதலாகிய மொழியுமுளப்பட, அன்றியனைத்தும் எல்லாவழியும், நின்றசொன்முன் இயல்பாகும்மே. Nunnool உயிரீ. 8. Ex. விளஞான்றது, கிளிவலிது, பொன்சிறிது.

3. அவற்றுள்; மெல்லெழுத்தியற்கை உறழினும்வரையார், சொல்லிய தொடர்மொழி இறுதியான. Ex. கதிர்ஞெரி கதிர்ஞ்ஞெரி, இதழ்நுனி இதழ்ந்நுனி, மெய்ஞானம் மெய்ஞ்ஞானம், &c.

4. ணனவென்புள்ளிமுன்யாவும்ஞாவும், வினையோரனைய வென்மனார் புலவர். Ex. மண்யாத்த மண்ஞாத்த: பொன்யாத்த பொன்ஞாத்த, மண்யாமை மண்ஞாமை.

5. மொழிமுதலாகுமெல்லாவெழுத்தும், வருவழிநின்ற ஆயிருபுள்ளியும், வேற்றுமை யல்வழித்திரிபிடனிலவே. Ex. மண்கடிது, பொன்பெரிது. [ஞன.

ன்றுபயனெதிர்ச் சொன்னபக்கமுஞ், சிறந்தநாளணி செற்றநீக்கிப, பிறந்நாள்வயிற் பெருமங்கலமுஞ், சிறத்தசீர்த்தி மண்ணுமங்கலமு, நடைமிகுத்தேத்திய குடைநிழன்மரபு, மாணார்ச்சுட்டிய வாண்மங்கலமு, மன்னெயிலழித்த மண்ணுமங்கலமும், பரிசிலகடைஇய கடைக்கூட்டுநிலையும் பெற்றபின்னரும் பெருவளனேத்தி, நடைவயிற்றோன்று மிருவகைவிடையு, மச்சமுமுவகையு மெச்சமின்றி, நாளும்புள்ளும் பிறவற்றுநிமித்தமுங், காலங்கண்ணிய வோம்படையுளப்பட, ஞாலத்துவரூஉ நடக்கையதுகுறிப்பிற், காலமூன்றொடு கண்ணியவருமே. †

புறத்திணைமுற்று.

CHAPTER III. களவியல். CLANDESTINE MARRIAGE.

1. இன்பமும்பொருளு மறனுமென்றாங், கன்பொடுபுணர்ந்த வைந்திணைமருங்கிற், காமக்கூட்டங் காணுங்காலை, மறையோர்தேஎத்து மன்றலெட்டனுட், டுறையமைநல்லியாழ்த் துணைமையோரியல்பே.

2. ஒன்றேவேறே யென்றிருபால்வயி, னொன்றியுயர்ந்த பாலதாணையி, னொத்தகிழவனுங் கிழத்தியுங்காண்ப, மிக்கோனாயினுங் கடிவரையின்றே.

3. சிறந்துழியையஞ் சிறந்ததென்ப, விழிந்துழியிழிபே சுட்டலான.

4. வண்டேயிழையே வல்லிபூவே, கண்ணேயலமர லிமைப்பேயச்சமென் றன்னவைபிறவு மாங்கவணிகழ, நின்றவை களையுங்கருவியென்ப.

5. நாட்டமிரண்டு மறிவுடம்படுத்தற்குக், கூட்டியுரைக்குங் குறிப்புரையாகும்.

6. குறிப்பேகுறித்தவை கொள்ளுமாயி, னாங்கவைநிகழு மென்மனார்புலவர்.

7. பெருமையும்உரனும் ஆடூஉமேன.

8. அச்சமும்நாணும் மடனுமுந்துறுத்த, நிச்சமும்பெண்பாற்குரியவென்ப.

9. வேட்கையொருதலை யுள்ளுதன்மெலித, லாக்கஞ்செப்பனாணுவரையிறத்த, னோக்குவவெல்லா மவையேபோறன், மறத்தன்மயக்கஞ் சாக்காடென்றச், சிறப்புடைமரபினவை களவெனமொழிப.

10. முன்னிலையாக்கல் சொல்வழிப்படுத்த, னன்னயமுரைத்த னகைநனியுறூஅத், தந்நிலையறிதன் மெலிவுவிளக்குறுத்த, றந்நிலையுரைத்த றெளிவகப்படுத்தலென், றின்னவைநிகழு மென்மனார்புலவர்.

11. மெய்தொட்டுப்பயிறல் பொய்பாராட்ட, லிடம்பெற்றுத்தழாஅ, லிடையூறுகிளத்த, னீடுநினைந்திரங்கல் கூடுதலுறுதல், சொல்லியநுகர்ச்சி வல்லேபெற்றுழித், தீராத்தேற்ற முளப்படத்தொகைஇப், பேராச்சிறப்பினிருநான்குகிளவியும், பெற்றவழிமகிழ்ச்சியும் பிரிந்தவழிக்கலங்கலு, நிற்பவைநினைஇ நிகழ்பவையுரைப்பினுங், குற்றங்காட்டிய வாயில்பெட்பினும்

† Compare this Chapter with ஐயனாரிதனார் வெண்பாமாலை and புறப்பொருட் பன்னிருபடலம்.

பெட்டவாயில்பெற் றிரவுவலியுறுப்பினு மூருமபேருங் கெடுதியும்பிறவு
நீரிற்குறிப்பி னிரம்பக்கூறித், தோழியைக்குறையுறும் பகுதியுந்தோழி
குறையவட்சார்த்தி மெய்யுறக்கூறலுந் தண்டாதிரப்பினும் மற்றைய வழி
யுஞ் சொல்லவட்சார்த்தலிற் புல்லியவகையினு,மறிந்தோள்யாப்பி னவ்வ
ழியருங்கிற், கேடும்பீடும் கூறலுந்தோழி, நீக்கலினாகிய நிலைமையுநோக்கி,
மடன்மாகூறு மிடனுமாருண்டே.

12. பண்பிற்பெயர்ப்பினும் பரிவுற்றுமெலியினு, மன்புற்றுநகினு மவட்
பெற்றுமலியினு, மாற்றிடையுறுதலு மவ்வினைக்கியல்பே.

13. பாங்கனிமித்தம் பன்னிரண்டென்ப.

14. முன்னையமூன்றுங் கைக்கிளைக்குறிப்பே, பின்னையநான்கும் பெருந்
திணைபெறுமே.

15. முதலொடுபுணர்ந்த யாழோர்மேன, தவலருஞ்சிறப்பி னைந்நிலம்பெ
றுமே.

16. இருவகைக்குறிபிழைப் பாகியவிடத்துங், காணாவகையிற் பொழுது
நனியிகப்பினுந், தானகம்புகாஅன் பெயர்த்தலின்மையிற் காட்சியாசையிற்
களம்புக்குக்கலங்கி, வேட்கையின்மயங்கிய கையறுபொழுதினும், புகாஅ
க்காலைப் புக்கெதிர்ப்பட்டுழிப், பகாஅவிருந்தின் பகுதிக்கண்ணும், வேளா
ணெதிரும் விருந்தின்கண்ணும், வாளாணெதிரும் பிரிவினானும், நாணுநெஞ்
சலைப்ப விடுத்தற்கண்ணும், வரைதல்வேண்டித் தோழிசெப்பிய, புரைதீர்
கிளவி புல்லியவெதிரும், வரையுடன்படுதலு மாங்கதன்றிறத்தும், புரை
படவந்த மறுத்தலொடுதொகைஇக், கிழவோன்மேன வென்மனார்புலவர்.

17. காமத்திணையிற் கண்ணின்றுவரூஉ நாணும்மடனும் பெண்மையவாத
லிற், குறிப்பினும்இடத்தினும் அல்லதுவேட்கை, நெறிப்படவாரா வவள்
வயினான.

18. காமஞ்சொல்லா நாட்டம்இன்மையின், ஏமுறவிரண்டும் உளவென
மொழிப.

19. சொல்எதிர்மொழிதல் அருமைத்தாகலி, னல்லகூற்றுமொழியவள்வ
யினான.

20. மறைந்தவற்காண்டல்தற்காட்டுறுத, னிறைந்தகாலிற் சொல்லெதிர்
மழுங்கல், வழிபாடுமறுத்தல் மறுத்தெதிர்கோடல், பழிதீர்முறுவல் சிறி
தேதோற்றல், கைப்பட்டுக்கலங்கினும் நாணுமிகவரினும், இட்டுப்பிரிவிரங்
கினும், அருமைசெய்தயர்ப்பினும், வந்தவழியெள்ளினும் விட்டுயிர்த்தழுங்
கினும், நொந்துதெளிவொழிப்பினும் அச்சம்நீடினும், பிரிந்தவழிக்கலங்கி
னும் பெற்றவழிமலியினும், வருந்தொழிற்கருமை வாயில்கூறினும், கூறிய
வாயில்கொள்ளாக்காலையும், மனைப்பட்டுக்கலங்கிச் சிதைந்தவழித்தோழி
க்கு, நினைத்தல்சான்றவருமறையுயிர்த்தலும், முயிராக்காலத்துயிர்த்தலுமு
யிர்செல, வேற்றுவரைவுவரினது மாற்றுதற்கண்ணு, நெறிபடுநாட்டத்து

நிகழ்ந்ததைமறைப்பினும், பொறியினயர்த்தபுணர்ச்சிநோக்கி, யொருமைக்கேண்மையி னுறுகுறைதெளிந்தோ, ளருமைசான்றநாலிரண்டுவகையிற், பெருமைசான்றவியல்பின்கண்ணும், பெயர்தலையடுத்த மடலின்கண்ணுங், கையறுதோழிகண்ணீர்துடைப்பினும், வெறியாட்டிடத்து வெருவினகண்ணும், குறியினொப்புமை மருட்டற்கண்ணும், வரைவுதலைவரினும் களவறிவுறினுந், தமர்தற்காத்த காரணமருங்கினுந், தன்குறிதள்ளிய தெருளாக்காலை, வந்தனன்பெயர்ந்த வறுங்களநோக்கித், தன்பிழைப்பாகத் தழீஇத்தேறலும், வழுவின்றுநிலைஇய வியற்படுபொருளினும், பொழுதுமாறும் புரைவதன்மையி, னழிவுதலைவந்த சிந்தைக்கண்ணுங், காமஞ்சிறப்பினு மவனளிசிறப்பினு, மேமஞ்சான்ற வுவகைக்கண்ணுந், தன்வயினுரிமையு மவன்வயிற்பரத்தையு மன்னவுமுளவே யோரிடத்தான.

21. வரைவிடைவைத்த காலத்துவருந்தினும், வரையாநாளிடை வந்தோன்முட்டினு, முரையெனத்தோழிக் குரைத்தற்கண்ணுந், தானேகூறுங் காலமுமுளவே.

22. உயிரினுஞ்சிறந்தன்று நாணேநாணினுஞ், செயிர்தீர்காட்சிக் கற்புச்சிறந்தன்றெனத், தொல்லோர்கிளவி புல்லியநெஞ்சமொடு, காமக்கிழவனுள்வழிப்படினுந், தாவினன்மொழி கிழவிகிளப்பினு, மாவகைபிறவுந் தோன்றுமன்பொருளே.

23. நாற்றமுந்தோற்றமு மொழுக்கமுமுண்டியுஞ், செய்வினைமறைப்பினுஞ் செலவினும்பயில்வினும், புணர்ச்சியெதிர்ப்பா டுள்ளுறுத்துவரூஉ, முணர்ச்சியெழினு முணர்ந்தபின்றை, மெய்யினும்பொய்யினும் வழிநிலைபிழையாது, பலவேறுகவர்பொரு ணாட்டத்தானுங், குறையுறற்கெதிரிய கிழவனைமறையுறப், பெருமையிற்பெயர்ப்பினு முலகுரைத்தொழிப்பினு, மருமையினகற்சியு மவளறிவுறுத்துப், பின்வருகென்றலும் பேதைமையூட்டலு, முன்னுறுபுணர்ச்சி முறைநிறுத்துரைத்தலு, மஞ்சியச்சுறுத்தலு முரைத்துழிக்கூட்டமோ, டெஞ்சாதுகிளந்த விருநான்குகிளவியும், வந்தகிழவனை மாயஞ்செப்பிப், பொறுத்தகாரணங் குறித்தகாலையும், புணர்ந்தபின்னவன்வயின் வணங்கற்கண்ணுங், குறைந்தவட்படரினு மறைந்தவளருகத், தன்னொடுமவளொடு முதன்மூன்றளைஇப் பின்னிலைநிகழும் பலவேறுமருங்கினு, நன்னயம்பெற்றுழி நயம்புரியிடத்தினு, மெண்ணரும்பன்னகை கண்ணியவகையினும், புணர்ச்சிவேண்டினும் வேண்டாப்பிரிவினும், வேளாண்பெருநெறி வேண்டியவிடத்தும், புணர்ந்துழியுணர்ந்த வறிமடச்சிறப்பினு, மோம்படைகிளவிப் பாங்கின்கண்ணுஞ், செங்கடுமொழியாற் சிதைவுடைத்தாயினு, மென்புநெகப்பிரிந்தோள் வழிச்சென்றுகடைஇ, யன்புதலையடுத்தவன்பொறைக்கண்ணு, மாற்றதுதீமை யறிவுறுகலக்கமுங், காப்பின்கடுமை கையறவுவரினுங், களனும்பொழுதும் வரைநிலைவிலக்கிக், காதன்மிகுதி யுளப்படப்பிறவு, நாடுமூரு மில்லுங்குடியும், பிறப்புஞ்சி

றப்பு மிறப்புநோக்கி, யவன்வயிற்ருேன்றிய கிளவியொடுதொகைஇ, யனே நிலேவகையான் வரைதல்வேண்டினு, மையச்செய்கை தாய்க்கெதிர்மறுத் துப், பொய்யெனமாற்றி மெய்வழிகொடுப்பினு, மவன்விலங்குறினுங் களம்பெறக்காட்டினும், பிறன்வரைவாயினு மவன்வரைவுமறுப்பினு, முன்னிலேயறனெனப் படுத்தலென்றிருவகைப், புரைதீர்கிளவி தாயிடைப்புகுப்பினும், வரைவுடன்பட்டோர்க் கடாவல்வேண்டினு, மாங்கதன்றன்மையின் வன்புறையுளப்படப், பாங்குறவந்த நாலெட்டுவகையுந், தாங்கருஞ்சிறப்பிற் ருேழிமேன.

24. களவில்ராயினுங் காமமெய்ப்படுப்பினு,மன்புமிகத்தோன்றினுந் தலேப்பெய்துகாணினுங், கட்டினுங்கழங்கினும் வெறியெனவிருவரு, மொட்டியதிறத்தாற் செய்திக்கண்ணு, மாடியசென்றுழி யழிவுதலேவரினுங், காதல்கைம்மிகக் கனவினரற்றலுந், தோழியைவினுவலுந் தெய்வம்வாழ்த்தலும், போக்குடன்றந்தபிற் ருேழியொடுகெழீஇக், கற்பினுக்கத்து நிற்றற்கண்ணும், பிரிவினெச்சத்து மகனெஞ்சுவலிப்பினு, மிருபாற்குடிப்பொருளியல்பின்கண்ணு, மின்னவகையிற் பதின்மூன்றுகிளவியோ, டன்னவைபிறவுஞ்செவிலிமேன.

25. தாய்க்கும்வரையா ருணர்வுடம்படினே.

26. கிழவோனறியா வறிவினளிவளென, மையறுசிறப்பினுயர்ந்தோர் பாங்கி, னயக்கிளவியி னறிதலுமுரித்தே.

27. தன்னுறுவேட்கை கிழவன்முற்கிளத்த, லெண்ணுங்காலேக் கிழத்திக் கில்லேப், பிறநீர்மாக்க ளின்றியவாயிடை, பெய்ந்நீர்போலு முணர்விற்றென்ப.

28. காமக்கூட்டந்தனிமையிற்பொலிதலிற்,ருமேதூதுவராதலுமுரித்தே

29. அவன்வரம்பிறத்த லறந்தனக்கின்மையிற், களஞ்சுட்டுக்கிளவி கிழவியதாகுந், தான்செலற்குரிய வழியாகலான.

30. தோழியின்முடியு மிடனுமாருண்டே.

31. முந்நாளல்லது துணையின்றுகழியா, தந்நாளகத்து மதுவரைவின்றே.

32. பன்னூறுவகையினுந் தன்வயின்வருஉ, நன்னயமருங்கி னுட்டம்வேண்டலிற், றுணைச்சுட்டுக்கிளவி கிழவியதாகுந், துணையோர்கரும மாகலான.

33. ஆய்பெருஞ்சிறப்பி னருமறைகிளத்தலிற், ருயெனப்படுவோள் செவிலியாகும்.

34. தோழிதானே செவிலிமகளே.

35. சூழ்தலுமுசாத்துணை நிலேமையிற்பொலிமே.

36. குறையுறவுணர்தன் முன்னுறவுணர்த, லிருவருமுளவழி யவன்வரவுணர்தலென, மதியுடம்படுத்த லொருமூவகைத்தே. [மொழிப.

37. அன்னவகையா னுணர்ந்தபினல்லது, பின்னிலேமுயற்சி பெருனென

38. முயற்சிக்காலத் ததற்படநாடிப், புணர்த்தலாற்று மவள்வயினுன.

39. குறிபெனப்படுவ திரவினும்பகலினு, மறியத்தோன்றுமாற்றதென்ப.

40. இரவுக்குறியே யில்லகத்துள்ளு, மனேயோர்கிளவி கேட்கும்வழிய துவே, மனேயகம்புகாக் காலேயான.

41. பகற்புணர்களனே புறனெனமொழிப, வவளறிவுணரவருவழியான.

42. அல்லகுறிப்படுதலும் வள்வயினுரித்தே, யவன்குறிமயங்கிய வமைவொடுவரினே.

43. ஆங்காங்கொழுகு மொழுக்கமுமுண்டே, யோங்கியசிறப்பி னொரு சிறையான.

44. மறைந்தவொழுக்கத் தோரையுநாளுந் துறந்தவொழுக்கங் கிழவோர்க்கில்லே.

45. ஆறினதருமையு மழிவுமச்சமு, மூறுமுளப்பட வதனோரன்ன.

46. தந்தையுந்தன்னேயு முன்னத்தினுணர்ப.

47. தாயறிவுறுதல் செவிலியோடொக்கும்.

48. அம்பலுமலருங் களவுவெளிப்படுத்தலி, னங்கவன்முதலவன் கிழவனுகும்.

49. வெளிப்படவரைதல் படாமைவரைதலென், ருயிரண்டென்ப வரைதலாறே.

50. வெளிப்படைதானே கற்பினேடொப்பினு, ஞாங்கர்க்கிளந்த மூன்று பொருளாக, வரையாதுபிரிதல் கிழவோர்க்கில்லே.

களவியன் முற்று.

CHAPTER IV. கற்பியல் LAWFUL MARRIAGE AND THE MATRIMONIAL STATE.

1. கற்பெனப்படுவது கரணமொடுபுணரக், கொளற்குரிமரபிற் கிழவன் கிழத்தியைக், கொடைக்குரிமரபினோர்கொடுப்பக்கொள்வதுவே.

2. கொடுப்போரன்றியுங் கரணமுண்டே, புணர்ந்துடன்போகிய காலேயான.

3. மேலோர்மூவர்க்கும் புணர்த்தகரணங், கீழோர்க்காகியகாலமுமுண்டே.

4. பொய்யும்வழுவுந்தோன்றிப்பின்ன, ரையர்யாத்தனர் கரணமென்ப.

5. கரணத்தினமைந்து முடிந்தகாலே, நெஞ்சுதளேயவிழ்ந்த புணர்ச்சிக்கண்ணு, மெஞ்சாமகிழ்ச்சி யிறந்துவருபருவத்து, மஞ்சவந்தவுரிமைக்கண்ணு, நன்னெறிப்படருந் தொன்னலப் பொருளினும், பெற்றதேஎத்துப்பெருமையினிலேஇக், குற்றஞ்சான்றபொருளெடுத்துரைப்பினு, நாமக்காலத்துண்டெனத்தோழி, யேமுறுகடவுளேத்தியமருங்கினும் அல்லநீரவார்வமோடளேஇச், சொல்லுறுபொருளின்கண்ணுஞ்சொல்லென, வெனது(?)சுவைப்பினு நீகைதொட்டது,வானோரமுதம்புரையுமாலெமக்கென,வடிசிலும்பூவுந்தொடுதற்கண்ணு,மந்தணர்திறத்துஞ் சான்றோர்தேஎத்து,மந்தமில்

சிறப்பிற் பிறர்பிறர்திறத்தினு, மொழுக்கங்காட்டியகுறிப்பினு மொழுக்கத்துக், களவினுணிகழ்ந்த வருமையைப்புலம்பி, யலமரலுள்ள்மோடளவியவிடத்து, மந்தரத்தெழுதியவெழுத்தினமான, வந்தகுற்றம்வழிகெடவொழுகலு, மழிபலஞ்சலென்றுமிருபொருளினும், தானவட்பிழைத்தபருவத்தானு, நோன்மையும்பெருமையு மெய்கொளவருளிய, பன்னல்சான்றவாயிலொடு பொருந்தித் தன்னிணுகிய தகுதிக்கண்ணும், புதல்வற்பயந்தபுனிறுசேர்பொழுதி, னெய்யணிமயக்கம் புரிந்தோனேக்கி, யையர்பாங்கினுமமரர்ச்சுட்டியுஞ், செய்பெருஞ்சிறப்பொடுசேர்தற்கண்ணும், பயங்கெழுதுணைவனைப் புல்லியபுல்லர், துயங்குவள்கிடந்த கிழத்தியைக்குறுகிப் புல்கெனமுன்னிய நிறையழிபொழுதின் மெல்லனசேரடி புல்லியவிரவினுமுறலருந்தன்மையி னூடன்மிகுத்தோனைப், பிறப்பிற்பெண்டிரிற் பெயர்த்தற்கண்ணும், பிரிவினெச்சத்துப் புலம்பியவிருவாைப், பிரிவினீக்கியபகுதிக்கண்ணும் நின்றுநனிபிரிவினஞ்சியபையுளுஞ், சென்றுகையிகந்து பெயர்த்துள்ளியவழியுங், காமத்தின்வலியுங் கைவிடினச்சமுந் தானவட்பிழைத்த நிலையின்கண்ணு, முடன்சௌற்செய்கை யோடன்னபிறவு, மடம்படவந்த தோழிக்கண்ணும், வேற்றுநாட்டகல்வயின் விழுமத்தானு, மீட்டுவரவாய்ந்தவகையின்கண்ணு, மவ்வழிப்பெருகிய சிறப்பின்கண்ணும், பேரிசையூர்திப் பாங்கர்பாங்கனும், காமக்கிழத்தி மனையோளென்றிவ, ரேமுறுகிளவிசொல்லியவெதிருஞ். சென்றதேஎத்துழப்புநனிவிளக்கி, யின்றிச்சென்றதந்நிலைகிளப்பினு, மருந்தொழின்முடித்தசெம்மற்காலை, விருந்தொடுநல்லவை வேண்டற்கண்ணு, மாலையேந்தியபெண்டிருமக்களுங், கேளிரொழுக்கத்துப்புகற்சிக்கண்ணு, மேனைவாயிலெதிரொடுதொகைஇப், பண்ணமைபகுதிப்பதினொருமூன்று, மெண்ணருஞ்சிறப்பிற்கிழவோன்மேன.

6. அவனறிவாற்றவறியுமாகலி, னேற்றற்கண்ணுநிறுத்தற்கண்ணு, முரிமைகொடுத்தகிழவோன்பாங்கிற், பெருமையிற்றிரியாவன்பின்கண்ணுங், கிழவன்மகவுஉப்புலம்புபெரிதாகலி, னலமரல்பெருகியகாமத்தின்மிகுதியு, மின்பமுமிடும்பையுமாகியவிடத்துங், கயந்தலைதோன்றியகாமர்நெய்யணி, நயந்தகிழவனைநெஞ்சுபுண்ணுறீஇ, நளியினீக்கியவிளிவருநிலையும்,புகன்றவுள்ளமொடுபுதுவோர்சாயற், ககன்றகிழவனைப்புலம்புநனிகாட்டி யியன்றநெஞ்சந்தலைப்பெயர்த்தருக்கி, யெதிர்பெயதுமறுத்தவீரத்துமருங்கினுந், தங்கியவொழுக்கத்துக்கிழவனைவணங்கி, யெங்கையர்க்குரையெனவிரத்தற்கண்ணுஞ், செல்லாக்காலைச்செல்கெனவிடுத்தலுங், காமக்கிழத்திதன்மகத்தழீஇ, யேமுறுவிளையாட்டிறுதிக்கண்ணுஞ், சிறந்தசெய்கையவ்வழித்தோன்றி, யறம்புரியுள்ளமொடுதன்வரவறியாமைப், புறஞ்செய்துபெயர்த்தல் வேண்டிடத்தானுந், தந்தையரொப்பாமக்களென்பதனா, லந்தமில்சிறப்பின் மகப்பழித்துநெருங்கலுங், கொடியோர்கொடுமைசுடுமெனவொடியாது, நல்லிசைநயந்தோர்சொல்லொடுதொகைஇப், பகுதி

யினீங்கியதகுதிக்கண்ணும், கொடுமையொழுக்கங்கோடல்வேண்டி, யடி மேல்வீழ்ந்தகிழவனைநெருங்கிக், காதலெங்கையர்காணினன்றென, மாதர் சான்றவகையின்கண்ணும், தாயர்கண்ணியநல்லணிப்புதல்வனை, மாயப்ப ரத்தையுள்ளியவழியுந், தன்வயிற்சிறப்பினுமவன்வயிற்பிரிப்பினு, மின்னு த்தொல்சூளெடுத்தற்கண்ணுங், காமக்கிழத்தியர்நலம்பாராட்டிய, தீமை யின்முடிக்கும்பொருளின்கண்ணுங், கொடுமையொழுக்கத்துத்தோழிக்கு ரிமைய, மறுவறுசிறப்பிற்கற்பிற்றிரியாமைக், காய்தலுமுவத்தலும் பிரி தலும்பெட்டலு, மாவயின்வரூஉம் பலவேறுநிலையினும், வாயிலின்வரூஉம்வ கையொடுதொகைஇக், கிழவோன்செப்பல்கிழவதென்ப.

7. புணர்ந்துடன்போகியகிழவோணன்மனை, யிருந்திடைச்சுரத்திறைச் சியும்வினையுஞ், சுட்டியன்புறுத்தற்குக்கிளத்தலுமே, கிழவோன்செய்வி னைக்கெச்சமாகும்.

8. தோழியுள்ளுறுத்தவாயில்புகுப்பினு, மாவயனிகழுமென்மனார்புல [வர்.

9. பெறற்கரும்பெரும்பொருண்முடிந்தபின்வந்த, தெறற்கருமரபிற்சிற ப்பின்கண்ணு, மற்றவழியுரைப்பினுமற்றமில்லாக், கிழவோட்சுட்டியதெ ய்வக்கடத்தினுஞ், சீருடைப்பெரும்பொருள் வைத்தவழிமறைப்பினு, மட ங்காவொழுக்கத்தவன்வயினழிந்தோளை, யடங்கக்காட்டுதற்பொருளின்க ண்ணும், பிழைத்துவந்திருந்த கிழவனைநெருங்கி, யழைத்தாங்காக்கிக்கொ டுத்தற்கண்ணும், வணங்கியன்மொழியான்வணங்கற்கண்ணும், புறம்படு விளையாட்டுப்புல்லிப்புகற்சியுஞ், சிறந்தபுதல்வனைத்தேராதுபுலம்பினு,மா ணலந்தாவெனவகுத்தற்கண்ணும், பேணுவொழுக்கநாணியபொருளினுஞ், சூணயத்திறத்தாற்சோர்வுகண்டழியினும்,பெரியோரொழுக்கம்பெரிதென க்கிளந்து, பெறுதகையில்லாப் பிழைப்பினுமவ்வயி, னுறுதகையில்லாப்பு லவியுண்மூழ்கிக்,கிழவோன்பானின்றுகெடுத்தற்கண்ணு, முணர்ப்புவயின் வாராவூடலுற்றோள்வயி, னுணர்த்தல்வேண்டியகிழவோன்பானின்று, தா ன்வெகுண்டாக்கியதகுதிக்கண்ணு,மருமைக்காலத்துப்பெருமைகாட்டிய, வெண்மைக்காலத்திரக்கத்தானும், பாணர்கூத்தர்விறலியரென்றிவர், பே ணிச்சொல்லியபிறவினையேதிரு, நீத்தகிழவனைநிகழுமாறுபடீஇ † யாக்கா த்தற்றன்மையிற்கண்ணின்றுபெயர்ப்பினும், பிரியுங்காலையெதிர்நின்றுசா ற்றிய,?மரபுடையேதிருமுளப்படப்பிறவும், வகைபடவந்தகிளவியெல்லா ந்,தோழிக்குரியவென்மனார்புலவர். † நிகழும்படியாக்காதற்றன்மையிற்.

10. புல்லுதன்மயக்கும் புலவிக்கண்ணு, மில்லோர்செய்வினை நிகழ்ச்சி க்கண்ணும், பலவேறுபுதல்வற் கண்டுநெனியுவப்பினு, மறையின்வந்த மனை யோள்செய்வினைப், பொறையின்றுபெருகிய பருவரற்கண்ணுங், காதற் சோர்விற் கடப்பாட்டாண்மையிற், றாய்போற்றழீஇக்கழறியமனைவியைக் காய்வின்றவன்வயிற் பொருத்தற்கண்ணு, மின்னகைப்புதல்வனைத்தழீஇ யிழையணிந்து, பின்னவர்வந்த வாயிற்கண்ணு, மனையோளொத்தலிற் ற

ன்னோரன்னோர், மி கைபடக்குறித்த கொள்கைக்கண்ணு, மெண்ணியபண் ணேயென் றிவற்றொடுபிறவுங், கண்ணியகாமக்கிழத்தியர்மேன.

11. கற்புங் காமமு நற்பாலொழுக்கமு, மெல்லியற்பொறையு நிறையும் வல்லிதின், விருந்துபுறந்தருதலுஞ் சுற்றமோம்பலும், பிறவுமன்ன கிழ வோண்மாண்பு, கண்முகம்புகன்ற முறையிற்கிழவோற்கிளத்த, லகம்புக ன்மரபின வாயில்கட்குரிய.

12. கழிவினுநிகழ்வினு மெதிர்வினும்வழிக்கொள, நல்லவையுரைத்தலு மல்லவைகடிதலுஞ், செவிலிக்குரியவாகுமென்ப.

13. சொல்லியகிளவி யறிவர்க்குமுரிய.

14. இடித்துவரைநிறுத்தலு மவரதாகுங், கிழவனுங்கிழத்தியு மவர்வரை நிற்றலின்.

15. உணர்ப்புவரையிறப்பினுஞ் செய்குறிபிழைப்பினும், புலத்தலூடலூட லுங் கிழவோற்குரிய.

16. புலத்தலூடலு மாகியவிடத்துஞ், சொலத்தகுகிளவி தோழிக் குரிய.

17. பரத்தைமறுத்தல் வேண்டியுங்கிழத்தி, மடத்தகுகிழமை யுடைமை யானு, மன்பிலகொடிமை யென்றலுமுரியள்.

18. அவன்குறிப்பறிதல் வேண்டியுங்கிழத்தி, யகன்மலியூட லகற்றியக் கண்ணும், வேற்றுமைக்கிளவி தோற்றவும்பெறுமே.

19. காமக்கடப்பினுட் பணிந்தகிளவி, காணுங்காலைக் கிழவோர்க்குரி த்தே, வழிபடுகிழமை யவட்கியலான.

20. அருண்முந்துறுத்த வன்புபொதிகிளவி, பொருள்படமொழிதல் கிழ வோட்குமுரித்தே.

21. களவுங்கற்பு மலர்வரைவின்றே.

22. அலரிற்றோன்றுங் காமத்திற்சிறப்பே.

23. கிழவோன்விளையாட் டாங்குமற்றே.

24. மனைவிதலைத்தாட் கிழவோன்கொடுமை, தம்முளவாதல் வாயில்கட் கில்லை.

25. மனைவிமுன்னர்க் கையறுகிளவி, மனைவிக்குறுதி யுளவழியுண்டே.

26. முன்னிலைப்புறமொழி யெல்லாவாயிற்கும், பின்னிலைத்தோன்று மெ ன்மனார்புலவர்.

27. தொல்லவையுரைத்தலு நுகர்ச்சியேத்தலும், பல்லாற்றானு மூடலிற் றணித்தலு, முறுதிகாட்டலு மறிவுமெய்நிறுத்தலு, மேதுவினுணர்த்தலு ந் துணிவுகாட்டலு, மணிநிலையுரைத்தலுங் கூத்தர்மேன.

28. நிலம்பெயர்ந்துரைத்தல் வரைநிலையுரைத்தல், கூத்தற்கும்பாணற்கும் யாத்தவையுரிய.

29. ஆற்றதுபண்புங் கருமத்துவிளைவு, மேவன்முடிவும் வினவுஞ்செப்பு,

மாற்றிடைக்கண்ட பொருளுமிறைச்சியுந், தோற்றஞ்சான்ற வன்னவை பிறவு, மிளையோர்க்குரிய கிளவியென்ப.

30. உழைக்குறுந்தொழிலுங் காப்புமுயர்ந்தோர்க்கு, நடக்கையெல்லா மவர்கட்படுமே.

31. பின்முறையாக்கிய பெரும்பொருள் வதுவைத், தொன்முறைமனைவி யெதிர்ப்பாடாயினு, மின்னிழைப்புதல் வனைவாயில்கொண்டுபுகினு, மிறந் ததுநினைஇக் கிழவோனுழைக்கட், கலங்கலுமுரிய னென்மனார் புலவர்.

32. தாய்போற்கழறித் தழீஇக்கோட, லாய்மனைக்கிழத்திக்கு முரித்தெ னமொழிப, வவ்வொடுமயங்கிய காலையான.

33. அவன்சோர்புகாத்தல் கடனெனப்படுதலின், மகன்முயுயர்புந் தன் னுயர்பாகுஞ், சொல்வனபணி(னீ)மொழி யியல்பாகலான.

34. எண்ணரும்பாசறைப் பெண்ணொடுபுணரார்.

35. புறத்தோராங்கட் புணர்வதென்ப.

36. காமநிலையுரைத்தலுந்தோழிநிலையுரைத்தலுங், கிழவோன்குறிப்பினை யெடுத்தனர் மொழிதலு, மாவொடுபட்ட நிமித்தமுங்கூறலுஞ், செலவுறுகி ளவியுஞ் செலவழுங்குகிளவியு, மன்னபிறவும் பார்ப்பார்க்குரிய. [ன்ப.

37. எல்லாவாயிலு மிருவர்தேஎத்தும், புல்லியமகிழ்ச்சிப் பொருளவெ

38. அன்புதலைப்பிரிந்த கிளவிதோன்றிற், சிறைப்புறங்குறித்தன றென்ம னார்புலவர்.

39. தற்புகழ்கிளவி கிழவன்முற்கிளத்த, லெத்திறத்தானுங் கிழத்திக்கில்லை, முற்படவகுத்த விரண்டலங்கடையே.

40. கிழவிமுன்னர்த் தற்புகழ்கிளவி, கிழவோன்வினைவயி னுரியவென்ப.

41. மொழியெதிர்மொழிதல் பாங்கற்குரித்தே.

42. குறித்தெதிர்மொழித லஃகித்தோன்றும்.

43. துன்புறுபொழுதினுமெல்லாங்கிழவன், வன்புறுத்தல்லதுசேரலில்லை.

44. செலவிடையழுங்கல் செல்லாமையன்றே, வன்புறைகுறித்த றவிர்ச்சி யாகும்.

45. கிழவிநிலையே வினையிடத் துரையார், வென்றிக்காலத்து விளங்கித் தோன்றும்.

46. பூப்பின்புறப்பா டீராறுநாளு, நீத்தகன்றுறையா ரென்மனார்புலவர், பரத்தையிற்பிரிந்த காலையான, வேண்டிய கல்வியாண்டுமூன்றிறவாது.

47. வேந்துறுதொழிலே யாண்டினதகமே.

48. ஏனைப்பிரிவு மவ்வியனிலையும்.

49. யாறுங்குளனுங் காவுமாடிப், பதியிகந்துநுகர்தலு முரியவென்ப.

50. காமஞ்சான்ற கடைக்கோட்காலை, யேமஞ்சான்ற மக்களொடுதுவன் றி, யறம்புரிசுற்றமொடு கிழவனுங்கிழத்தியுஞ் சிறந்ததுபயிற்றுத லிறந்தத ன்பயனே.

51. தோழிதாயே பார்ப்பான்பாங்கன், பாணன்பாடினி யிளையர்விருந்தினர், கூத்தர்விறலியறிவர் கண்டோர், யாத்தசிறப்பின் வாயில்களென்ப.

52. வினைவயிற்பிரிந்தோன் மீண்டுவருகாலை,யிடைச்சுரமருங்கிற் றவிர்தலில்லை, யுள்ளம்போல வுற்றுழியுதவும், புள்ளியற்கலிமா வுடைமையான.

CHAPTER V. பொருளியல். EXPLANATION OF TERMS AND DISCREPANCIES.

1. இசைதிரிந்திசைப்பினு மியையுமன்பொருளே,யசைதிரிந்தியலா வென்மனார்புலவர்.

2. நோயுமின்பமு மிருவகைநிலையிற்,காமங்கண்ணிய மரபிடைதெரிய, எட்டன்பகுதியும் விளங்கவொட்டிய, வுறுப்புடையதுபோலுணர்வுடையதுபோன், மறுத்துரைப்பதுபோ னெஞ்சொடுபுணர்த்துஞ், சொல்லாமரபின வற்றொடுகெழீஇச்,செய்யாமரபிற்றொழிற்படுத்தடக்கியு, மவரவருறுபிணிதமபோற்சேர்த்தியு, மறிவும்புலனும்வேறுபடநிறீஇ, யிருபெயர்மூன்று முரியவாக, வுவமவாயிற் படுத்தலுமுவமமோ டொன்றிடத்திருவர்க்குமுரியபாற்கிளவி.

3. கனவுமுரித்தா லவ்விடத்தான.

4. தாய்க்குமுரித்தாற் போக்குடன்கிளப்பின்.

5. பால்கெழுகிளவி நால்வர்க்குமுரித்தே.

6. நட்பினடக்கையா (ங்கலங்கடையே) மிரண்டலங்கடையே.

7. உயிருநாணு மடனுமென்றிவை, செயிர்தீர்சிறப்பினு லவர்க்குமுரிய.

8. வண்ணந்திரிந்து(பசந்து)புலம்புறுகாலை, யுணர்ந்ததுபோல வுறுப்பினைக்கிழவி, புணர்ந்தவகையிற் புணர்க்கவும்பெறுமே.

9. உடம்புமுயிரும் வாடியக்கண்ணு, மெண்ணுற்றனள்கொ லிவையெனினல்லது, கிழவோற்சேர்தல் கிழத்திக்கில்லை.

10. ஒருசிறை நெஞ்சமோடுசாவுங்காலை, யுரியதாகலு முண்டெனமொழிப.

11. தன்வயிற்காத்தலு மவன்வயின்வேட்டலு, மன்னவிடங்க ளல்வழியெல்லா, மடனொடுநிற்றல் கடனெனமொழிப.

12. அறத்தொடு நிற்குங் காலத்தன்றி, யறத்தியன்மரபில டோழியென்ப.

13. எளித்தலேத்தல்வேட்கையுரைத்தல், கூறுதலுசாஅத லேதீடுதலைப்பா, டுண்மைசெப்புங் கிளவியொடு தொகைஇ, யவ்வெழுவகையவென்மனார்புலவர்.

14. உற்றுழியல்லது சொல்லின்மையி, னப்பொருள்வேட்கை கிழவியினுணர்ப.

15. செறிவுநிறைவுஞ் செம்மையுஞ்செப்பு, மறிவுமருமையும் பெண்பா லான.

16. பொழுதுமாறுங் காப்புமென்றிவற்றின், வழுவனுகிய குற்றங்காட் டலுந், தன்னையழித்தலு மவனூறஞ்சலு, மிரவினும்பகலினு நீவரலென்ற லுங், கிழவோன்றன்னை வாரலென்றலு, நன்மையுந்தீமையும் பிறிதினைக் கூறலும், புரைபடவந்த வன்னவைபிறவும், வரைதல்வேட்கைப் பொருள வென்ப.

17. வேட்கைமறுத்துக் கிளந்தாங்குரைத்தன், மரீஇயமருங்கி னுரித்தே னமொழிப.

18. தேரும்யானையுங் குதிரையும்பிறவு, மூர்ந்தனரியங்கலுமுரியவென்ப (உரியவென்ப.)

19. உண்டற்குரிய வல்லாப்பொருள்களை, யுண்டனபோலக் கூறலும ரபே.

20. பொருளெனமொழிதலும் வரைநிலையின்றே, காப்புக்கைம் மிகுதலு ண்மையான.

21. அன்பேயறனே யின்பநாணொடு, துறந்தவொழுக்கம் பழித்தன்று கலி, னொன்றும்வேண்டா காப்பினுள்ளே.

22. சுரமெனமொழிதலும் வரைநிலையின்றே, (காப்புக்கைம்மிகுத லுண் மையான.)

23. உயர்ந்தோர்கிளவி வழக்கொடுபுணர்தலின், வழக்குவழிப்படுதல் செய்யுட்கடனே.

24. அறக்கழிவுடையன பொருட்பயம்படவரின், வழக்கெனவழங்கலும் பழித்தன்றென்ப.

25. மிக்கபொருளினுட் பொருள்வகைபுணர்க்க, நாணுத்தலைப்பிரியா நல் வழிப்படுத்தே.

26. முறைப்பெயர்மருங்கிற் கெழுதகைப்பொதுச்சொ, னிலைக்குரிமரபி னிற்கவும்பெறுமே.

27. தாயத்தினடையா வீயச்செல்லா, வினைவயிற்றங்கா வீற்றுக்கொளப் படா, வெம்மெனவரூஉங் கிழமைத்தோற்ற, மல்லாவாயினும் புல்லுவவுள வே. [மொழிப.

28. ஒருபாற்கிளவி யேனைப்பாற்கண்ணும், வருவனதாமே வழக்கென

29. எல்லாவுயிர்க்கு மின்பமென்பது, தானமர்ந்துவரூஉ மேவற்றாகும்.

30. பரத்தைவாயி னல்வர்க்குமுரித்தே, நிலத்திரிபின்றஃ தென்மனார் புலவர்.

31. ஒருதலையுரிமை வேண்டினுமகடூஉப், பிரிதலச்சமுண்மையானு, மம் பலுமலருங் களவுவெளிப்படுக்குமென், றஞ்சவந்த வாங்கிருவகையி(னும்) னோக்கொடுவந்த விடையூறுபொருளினும், போக்கும்வரவு மனைவிக்கட் டோன்றும்.

32. வருத்தமிகுதிசுட்டுங்காலையுரித்தெனமொழிபவாழ்க்கையுள்ளிரக்கம்.

33. மனைவியுயர்வுங் கிழவோன்பணிவு, நினையுங்காலைப் புலவியுளுரிய.

34. நிகழ்தகைமருங்கின் வேட்கைமிகுதியிற், புகழ்தலைவரையார் கற்பினுள்ளே.

35. இறைச்சிதானே பொருட்புறத்ததுவே.

36. இறைச்சியிற்பிறக்கும் பொருளுமாருளவே, திறத்தியன்மருங்கிற் றெரியுமோர்க்கே.

37. அன்புறுதகுன விறைச்சியுட்சுட்டலும், வன்பொறையாகும் வருந்தியபொழுதே. (அன்புறுத்தவன, அன்புறுத்துவன.)

38. செய்பொருளச்சமும் வினைவயிற்பிரிவு, மெய்பெறவுணர்ந்ததுங்கிழவிபாராட்டே. (மெய்பெறவுணர்த்தும்.)

39. கற்புவழிப்பட்டவள் பரத்தையேத்தினு, முள்ளத்தூடலுண்டென மொழிப.

40. கிழவோள்பிறழ்குண மிவையெனக்கூறிக், கிழவோன்குறிப்பினை யுணர்தற்குரியள்.

41. தம்முறுவிழுமம் பரத்தையர்கூறினு, மெய்மையாக வவர்வயினுணர்ந்து, தலைத்தாட்கற்ற மெதிர்பொழுதின்றே. (தாட்கழற்று.)

42. மலிதலுமூடலு மவையலங்கடையே.

43. பொழுதுதலைவைத்த கையறுகாலை, யிறந்தபோல்க் கிளக்குங்கிளவி, மடனேவருத்த மருட்கைமிகுதியோ, டவ்வநாற்பொருட் கணிகழுமென்ப.

44. இரந்துகுறையுற்ற கிழவனைத்தோழி நிரம்பநீக்கி நிறுத்தலன்றியும், வாய்மைகூறலும் பொய்தலைப்பெய்தலு, நல்வகையுடைய நலத்திற்கூறியும், பல்வகையானும் படைக்கவும்பெறுமே.

45. உயர்மொழிக்கிளவியுறழுங்கிளவி(யையக்கிளவியாடூஉவிற்குரித்தே)

46. உறுகணோம்ப றன்னியல்பாகலி, னுரியதாகுந் தோழிகணுரனே.

47. உயர்மொழிக்கிளவியு முரியவாலவட்கே.

48. வாயிற்கிளவி வெளிப்படக்கிளத்த, றவின்றுரிய தத்தங்கூற்றே.

49. உடனுறையுவமஞ்சுட்டுநகைசிறப்பெனக், கெடலருமரபினுள்ளுறை யைந்தே.

50. அந்தமில்சிறப்பினாகியவின்பந், தன்வயின்வருதலும்வகுத்தபண்பே.

51. மங்கலமொழியு † மவையலமொழியு,மாறிலாண்மையிற் சொல்லிய மொழியுங், கூறியமருங்கிற் கொள்ளுமென்ப. (அவைஇய.) †

52. சினனேபேதமை நிலம்புரிநல்குர, வனைநால்வகையுஞ் சிறப்பொடு வருமே. (நிலம்பிரி.)

53. அன்னையென்னை யென்றலுமுளவே.

54. தொன்னெறிமுறைமை சொல்லினுமெழுத்தினுந், தோன்றுமரபின் றென்மனார்புலவர். (மரபினவென்மனார்.)

55. ஒப்புமுருவும் வெறுப்புமென்றா, கற்புமேருமெழிலுமென்றா, சாய

லுநாணு மடனுமென்று, நோயும்வேட்கையு நுகர்வுமென்றுங், காமயின் வரூஉங் கிளவியெல்லா, நாட்டியன்மரபி னெஞ்சுசொளினல்லது, காட்டலாகாப் பொருளவென்ப.

56. இமையோர்தேஎத்து மெறிகடல்வரைப்பினு, மவையில்காலமின்மையான.

CHAPTER VI. மெய்ப்பாட்டியல். OF PASSIONS.

1. பண்ணைத்தோன்றிய வெண்ணான்குபொருளும், கண்ணியபுறனே நானான்கென்ப.

2. நாலிரண்டாகும் பாலுமாருண்டே.

3. நகையேயழுகை யிளிவரன்மருட்கை, யச்சம்பெருமிதம் வெகுளியுவகையென், றப்பாலெட்டே மெய்ப்பாடென்ப.

4. எள்ளலிளமை பேதைமைமடனென், றுள்ளப்பட்ட நகைநான்கென்ப.

5. இளிவேயிழவே யசைவேவறுமையென், றிளிவில்கொள்கை யழுகை நான்கே.

6. மூப்பேபிணியே வருத்தமென்மையோ, டியாப்புறவந்தவிளிவரனான்கே.

7. புதுமைபெருமை சிறுமையாக்கமொடு, மதிமைசாலா மருட்கைநான்கே.

8. அணங்கே விலங்கே களவர் தம்மிறையெனப், பிணங்கல்சாலா வச்சநான்கே.

9. கல்விதறுகணணிசைமைகொடையெனச், சொல்லப்பட்ட பெருமிதநான்கே.

10. உறுப்பறைகுடிகோ ளலைகொலையென்ன, வெறுப்பவந்தவெகுளிநான்கே.

11. செல்வம்புலனே புணர்வுவிளையாட்டென், றல்லனீத்தவுவகைநா

12. ஆங்கவையொருபா லாகவொருபா, லுடைமையின்புற னடுவுநிலையருள, றன்மையடக்கம் வரைதலன்பெனாஅக், கைமிகனலிதல் சூழ்ச்சிவாழ்த்த,னாணுதறுஞ்சலாற் றுக்கனவெனாஅ, முனிதனினைதல் வெரூஉதன்மடிமை, கருதலாராய்ச்சி விரைவுயிர்ப்பெனாஅக், கையாறிடுக்கண் பொச்சாப்புப்பொறாமை, வியத்தலைய மிகைநடுக்கெனாஅ, விவையுமுளவே யவையுலங்கடையே.

13. புகுமுகம்புரிதல் பொறிநுதல்வெயர்த்த, னகுநயமறைத்தல் சிதைவுபிறர்க்கின்மையொடு, தகுமுறைநான்கே யொன்றெனமொழிப.

14. கூழைவிரித்தல்கா தொன்றுகளைத, லூழணிதைவர லுடைபெயர்த்துடுத்தலொடு, கெழீஇயநான்கே யிரண்டெனமொழிப.

15. அல்குறைவரல் அணிந்தவைதிருத்த, லில்வலியுறுத்த லிருகையுமெடுத்தலொடு, சொல்லியநான்கே மூன்றெனமொழிப.

16. பாராட்டெடுத்தன் மடந்தபவுரைத்த, லீரமில்கூற்ற மேற்றலர்நாணல், கொடுப்பவைகோட லுளப்படத்தொகைஇ, யெடுத்தநான்கே நான்கெனமொழிப.

17. தெரிந்துடம்படுத திளைப்புவினைமறுத்தல, கரந்திடத்துமொழிதல் கண்டவழியுவத்தலொடு, பொருந்தியநான்கே யைந்தெனமொழிப.

18. புறஞ்செயச்சிதைதல்புலம்பித்தோன்றல், கலங்கிமொழிதல் கையற வுரைத்தலொடு, புலம்பியநான்கே யாறெனமொழிப.

19. அன்னபிறவு மவற்றொடுசிவணி, மன்னியவினையு நிமித்தமென்ப.

20. வினையுயிர்மெலிவிடத் தின்மையுமுடைத்தே, யவையுமுளவே யவையலங்கடையே.

21. இன்பத்தைவெறுத்த றுன்பத்துப்புலம்ப, லெதிர்பெய்துபரித லேதமாய்தல், பசியடநிற்றல் பசலைபாய்த, லுண்டியிற்குறைத லுடம்புநனி சுருங்கல், கண்டுயின்மறுத்தல் கனவொடுமயங்கல், பொய்யாக்கோடன் மெய்யேயென்ற, லையஞ்செய்த லவன்றமருவத்த, லறனழிந்துரைத்த லாங்குநெஞ்சழித, லெம்மெய்யாயினு மொப்புமைகோட, லொப்புவழியுவத்த லுறுபெயர்கேட்ட, னலத்தகநாடிற் கலக்கமுமதுவே.

22. முட்டுவயிற்கழறன் முனிவுமெய்ந்நிறுத்த, லச்சத்தினகறலவன் புணர்வுமறுத்த, றூதுமுனிவின்மை துஞ்சிச்சேர்தல், காதல்கைம்மிகல் கட்டுரையின்மையென், றுயிருநான்கே யழிவில்கூட்டம்.

23. தெய்வமஞ்சல் புரையறந்தெளித, லில்லதுகாய்த லுள்ளதுவர்த்தல், புணர்ந்துழியுண்மை பொழுதுமறுப்பாத, லருண்மிகவுடைமை யன்புமிகநிற்றல், பிரிவாற்றாமை மறந்தவையுரைத்தல், புறஞ்சொன்மாணுக்கிளவியொடுதொகைஇச், சிறந்தபத்துஞ் செப்பியபொருளே.

24. பிறப்பேகுடிமை யாண்மையாண்டோ, டுருவுநிறுத்த காமவாயி, னிறையேயருளே யுணர்வொடுதிருவென, முறையுறக்கிளந்த வொப்பினதுவகையே.

25. நிலம்பிரிகொடுமை வியப்பொடுபுறமொழி, வன்சொற்பொச்சாப்புமடிமையொடுகுடிமை, யின்புறலேழமை மறப்போடொப்புமை, யென்றிவையின்மை யென்மனார்புலவர்.

26. கண்ணினுஞ்செவியினுந்திண்ணிதினுணரு,முணர்வுடைமாந்தர்க்கல்லதுதெரியி,னன்னயப்பொருள்களெண்ணருங்குரைத்தே. (பொருள்கோள்.)

CHAPTER VII. உவமவியல். OF ANALOGY.

1. வினைபயமெய்யுரு வென்றநான்கே, வகைபெறவந்த வுவமத்தோற்றம்.

2. விரவியும்வருஉ மரபினவென்ப.

3. உயர்ந்ததன்மேற்றே யுள்ளுங்காலை.

4. சிறப்பேநலனே காதல்வலியோ, டந்நாற்பண்பு நிலைக்களமென்ப.

5. கிழக்கிடும்பொருளோ டைந்துமாகும்.

6. முதலுஞ்சினையுமென் றுயிருபொருட்கு, நுதலியமரபி னுரியவையுரிய.

7. சுட்டிக்கூறு வுவமமாயிற், பொருளெதிர் புணர்ந்து புணர்த்தனர் கொளலே. (புணர்ந்தனர்-புணர்ந்தன.)

8. உவமமும்பொருளு மொத்தல்வேண்டும்.

9. பொருளேயுவமஞ் செய்தனர்மொழியினு, மருளறுசிறப்பி னஃதுவமமாகும். [டுடைய.

10. பெருமையுஞ்சிறுமையும் சிறப்பிற்றீராக், குறிப்பின்வருஉ நெறிப்பா

11. அவைதாம், அன்னவேயப்ப வுறழவொப்ப, வென்னமான வென்றவையெனாஅ, வொன்றவொடுங்க வொட்டவாங்க, வென்றவியப்ப வென்றவையெனாஅ, வெள்ளவிழைய விறப்பநிகர்ப்பக், கள்ளக்கப்பவாங்கவையெனாஅக், காய்ப்பமதிப்பத் தகையமருள, மாற்றமறுப்ப வாங்கவையெனாஅப் புல்லப்பொருவப் பொற்பபோல, வெல்லவீழ வார்கவையெனாஅ நாடநளிய நடுங்கநந்த, வோடப்புரைய வென்றவையெனாஅ, வாறுறவையு மன்னபிறவும், கூறுங்காலைப் பல்குறிப்பினவே.

12. அன்னவாங்க மானவிறப்ப, வென்னவுறழத் தகையநோக்கொடு கண்ணியவெட்டும் வினைப்பாலுவமம்.

13. அவற்றுள், அன்னவென்கிளவி பிறவொடுசிவணும்.

14. எள்ளவிழையப் புல்லப்பொருவக், கள்ளமதிப்ப வெல்லவீழ, வென்றுங்கெட்டே பயனிலையுவமம்.

15. கடுப்பவேய்ப்ப மருளப்புரைய, வொட்டவொடுங்க வோடநிகர்ப்ப வென், றப்பாலெட்டே மெய்ப்பாலுவமம்.

16. போலமறுப்ப வொப்பக்காய்ப்ப, நேரவியப்ப நளியநந்தவென், றொத்துவருகிளவி யுருவினுவமம.

17. தத்தமரபிற் றோன்றுமன்பொருளே.

18. நாலிரண்டாகும் பாலுமாருண்டே.

19. பெருமையுஞ்சிறுமையு மெய்ப்பாடெட்டென, வழிமருங்கறியத் தோன்றுமென்ப.

20. உவமப்பொருளி னுற்றதுணருந், தெளிமருங்குளவே திறத்தியலான.

21. உவமப்பொருளை யுணருங்காலை, மரீஇயமரபின் வழக்கினவாகும்.

22. இரட்டைக்கிளவி யிரட்டைவழித்தே.

23. பிறிதொடுபடாது பிறப்பொடுநோக்கி, முன்னமரபிற் கூறுங்காலைத், துணிவொடுவருஉந் துணிவினோர்கொளினே.

24. உவமப்போலி யைந்தெனமொழிப.

25. தலைலருஞ்சிறப்பினத் தன்மைநாடின, வினையினும்பயத்தினு முறுப்பினுமுருவினும், பிறப்பினும்வருஉந் திறத்தவென்ப.

26. கிழவிசொல்லி னளவறிகிளவி, தோழிக்காயினிலம் பெயர்ந்துரையாது.

27. கிழவோற்காயி னுரனொடுகிளக்கும்.

28. ஏனோர்க்காயி னிடம்வரைவின்றே.

29. இனிதுறுகிளவியுந் துன்புறுகிளவியு, முவமமருங்கிற் றோன்று மென்ப.

30. கிழவோட்குவம மீரிடத்துரித்தே.

31. கிழவோற்காயி னிடம்வரைவின்றே.

32. தோழியுஞ்செவிலியும் பொருந்துவழிநோக்கிக், கூறுதற்குரிய கொள்வழியான. [ளாஅல்.

33. வேறுபட்வந்த வுவமத்தோற்றங், கூறியமருங்கிற் கொள்வழிக்கொ

34. ஒரீஇக்கூறலு மரீஇயபண்பே.

35. உவமத்தன்மையு முரித்தெனமொழிப,பயனிலைவந்த வழக்கத்தான.

36. தடுமாறுவமங் கடிவரையின்றே.

37. அடுக்கியதோற்றம் விடுத்தல்பண்பே, நினிறுத்தமைத்த னிரனிறை சுண்ணம், வரன்முறைவந்த மூன்றலங்கடையே.

CHAPTER VIII. செய்யுளியல். OF VERSIFICATION.

1. மாத்திரையெழுத்திய லசைவகையெனாஅ, யாத்தசீரேயடியாப்பெனாஅ, மரபேதூக்கே தொடைவகையெனாஅ, நோக்கேபாவேயளவியலெனாஅத், திணையேகைகோள் கூற்றுவகையெனாஅக்,கேட்போர்களனே கால்வகையெனாஅப், பயனேமெய்ப்பா டெச்சவகையெனாஅ, முன்னம்பொருளே துறைவகையெனாஅ, மாட்டேவண்ணமோ டியாப்பியல்வகையி, னாறுதலையிட்ட வந்நாலைந்து, மம்மையழகு தொன்மைதோலே, விருந்தேயியைபே புலனேயிழையெனாஅப், பொருந்தக்கூறிய வெட்டொடுந்தொகைஇ, நல்லிசைப்புலவர் செய்யுளுறுப்பென, வல்லிதிற்கூறி வகுத்துரைத்தனரே.

2. அவற்றுள், மாத்திரைவகையு மெழுத்தியல்வகையு,மேற்கிளந்தன்ன வென்மனார்புலவர்.

3. குறிலேநெடிலே குறிலிணைகுறினெடி, லொற்றொடுவருத லொடுமெய்ப்படநாடி, னேருநிரையுமென்றிசினோரே.

4. இருவகையுகரமோ டியைந்தனவரினே, நேர்புநிரைபுமாகுமென்ப.

5. குறிலிணையுகர மல்வழியான.

6. இயலசைமுதலிரண் டேனைய வுரியசை.

7. தனிக்குறின் முதலசை மொழிசிதைந்தாகாது.

8. ஒற்றெழுத்தியற்றே குற்றியலிகரம்.

9. முற்றியலுகரமு மொழிசிதைத்துக்கொள்ளா, நிற்றலின்றே யீற்றடிருங்கினும். [றுமே.

10. குற்றியலுகரமு முற்றியலுகரமு,மொற்றொடுந் தோன்றிநிற்கவும்பெ

11. அசையுஞ்சீரு மிசையொடுசேர்த்தி, வகுத்தன ருணர்த்தலும் வல்லோராறே. [படுமே.

12. ஈரசைகொண்டு மூவசைப்புணர்ந்துஞ், சீரியைந்திற்றது சீரெனப்

13. இயலசைமயக்க மியற்சீரேனை, யுரியசைமயக்கமா சிரியவுரிச்சீர்.
14. முன்னிரைவரினு மன்னவாகும்.
15. நேரவணிற்பி னியற்சீர்ப்பால. [ன்ப.
16. இயலசையீற்று முன்னுரியசைவரினே, நிரையசையியல வாகுமெ
17. அளபெடையசைநிலை யாகலுமுரித்தே.
18. ஒற்றளபெடுப்பினு மற்றெனமொழிப.
19. இயற்சீரிறுதிமு னேரவணிற்பி,னுரிச்சீர்வெண்பா வாகுமென்ப.
20. வஞ்சிச்சீரென வகைபெற்றனவே, வெண்சீரல்லா மூவசையென்ப. (மூவசையான.)
21. தன்பாவலவழித் தானடைவின்றே.
22. வஞ்சிமருங்கி னெஞ்சியவுரிய. [லவே.
23. வெண்பாவுரிச்சீ ராசிரியவுரிச்சீ, ரின்பாநேரடிக் கொருங்குநிலையி
24. கலித்தளைமருங்கிற் கடியவும்படாஅ. [ர்க்கே.
25. கலித்தளையடிவயி னேரீற்றியற்சீர், நிலைக்குரித்தன்றே தெரியுமோ
26. வஞ்சிமருங்கினு மிறுதிநில்லா.
27. இசைநிலைநிறையநிற்குவவாயினு,மசைநிலைவரையார்சீர்நிலைபெறலே.
28. இயற்சீர்ப்பாற்படுத் தியற்றினர் கொளலே, தளைவகைசிதையாத் தன்மையான.
29. வெண்சீரீற்றசை நிரையசையியற்றே.
30. இன்சீரியையவருகுவதாயின், வெண்சீர்வரையாராசிரியவடிக்கே.
31. அந்நிலைமருங்கின் வஞ்சியுரிச்சீ, ரொன்றுதலுடையவோரோவொருவழிக்கே.
32. நாற்சீர்கொண்ட தடியெனப்படுமே.
33. அடியுள்ளனவே தளையொடுதொடையே.
34. அடியிறந்துவருத லில்லெனமொழிப.
35. அடியின்சிறப்பே பாட்டெனப்படுமே.
36. நாலெழுத்தாதி யாகவாறெழுத், தேறியநிலத்தே குறளடியென்ப.
37. ஏழெழுத்தென்ப சிந்தடிக்களவே, யீரெழுத்தேற்ற மல்வழியான.
38. பத்தெழுத்தென்ப நேரடிக்களவே, யொத்தநாலெழுத் தொற்றலங்கடையே.
39. மூவைந்தெழுத்தே நெடிலடிக்களவே, யீரெழுத்துமிகுதலு மியல்பெனமொழிப. [றுமென்ப.
40. மூவாறெழுத்தே கழிநெடிற்களவே, யீரெழுத்துமிகுதலு மிவட்பெ
41. சீர்நிலைதானே யைந்தெழுத்திறவாது.
42. நேர்நிலைவஞ்சிக் காறுமாகும். [மொழிப.
43. எழுத்தளவெஞ்சினுஞ் சீர்நிலைதானே, குன்றலுமிகுதலு மில்லென
44. உயிரில்லெழுத்துமெண்ணப்படாஅ,வுயிர்த்திறமியக்கமின்மையான.
45. வஞ்சியடியே யிருசீர்த்தாகும்.

46. ..ன்சீரொழுத்தி.. சிறுமைமூன்றே. (சின்மைமூன்றே.)
47. மூச்சீரானும் வரு..டனுடைத்தே.
48. அசைகூனுகு மவ்வயினன.
49. சீர்கூனுதனேரடிக்குரித்தே.
50. ஐவகையடியும் விரிக்குங்காலை, மெய்வகையமைத்த பதினேழ்நிலத் த, வெழுபதுவகையின் வழுவிலவாகி, யறுநூற்றிருபத்தைந்தாகும்மே.
51. ஆங்கனம்விரிப்பி னளவிறந்தனவே, பாங்குறவுணர்ந்ததோர் பன் னுங்காலை.
52. ஐவகை..டியு மாசிரியக்குரிய.
53. விராஅயவரினு மொரூஉநிலையிலவே.
54. த..சீ..வகையினுந் ..ளைநிலைவகையினு.. மின்சீர்வகையினேந் தடிக்கு முரிய.
55. தன்சீருளவழித் தளைவகைவேண்டா, சீரியமருங்கி னோரசையொப் பி, னாசிரியத்தளையென்றறியல்வேண்டும்.
56. குறளடிமுதலா வளவடிகாறு, முறழ்நிலையிலவே வஞ்சிக்கென்ப.
57. அளவுஞ்சிந்தும்வெள்ளைக்குரிய, தளை..கையொன்றுத்தன்மையான.
58. அளவடிமிகுதி யுளப்படத்தோன்றி, யிருநெடிலடியுங்கலிபிற்குரிய.
59. நிரைமுதல்வெண்சீர் வந்துநிரைதட்டல், வரைநிலையினறே யவ்வ.. க்கென்ப.
60. விராயதளையு மொரூஉநிலையின்றே.
61. இயற்சீர்வெள்ளடியாசிரியமருங்கினிலைக்குரிமரபினிற்கவும்பெறுமே
62. வெண்டளைவிரவியு மாசிரியம்விரவியு, மைஞ்சீரடியு முளவென மொழிப.
63. அறுசீரடியேயாசிரியத்தளையொடுநெறிபெற்றுவரூஉநேரடிமுன்னே.
64. எழுசீரடியே முடுகியனடக்கும்.
65. முடுகியல்வரையார் முதலீரடிக்கும்.
66. ஆசிரியமருங்கினும் வெண்பாமருங்கினும், மூவகையடியு முன்னுத லிலவே.
67. ஈற்றயலடியே யாசிரியமருங்கிற், சீருற்றமுச்சீர்த் தாகுமென்ப.
68. இடையும்வரையார் தொடையுணர்வோரே.
69. முச்சீர்முரற்கையு ணிறையவுநிற்கும்.
70. வஞ்சித்தூக்கே செந்தூக்கியற்றே.
71. வெண்பாட்டீற்றடி முச்சீர்த்தாகும், அசைசீராகு மவ்வயினன,
72. நேரீற்றியற்சீர் நிரையுநிரைபுஞ், சீரேற்றிறூஉ மியற்கையவென்ப,
73. நிரையவணிற்பி னேருநேர்பும், வரைவின்றென்ப வாய்மொழிப் புலவர்.
74. எழுசீரிறுதி யாசிரியங்கலியே.
75. வெண்பாவியலினும் பண்புறமுடியும்.

76. எழுத்துமுதலா வீண்டியவடியிற், குறித்தபொருளைமுடியநாட்டல், யாப்பெனமொழிப யாப்பறிபுலவர்,

77. பாட்டுரைநூலே வாய்மொழிபிசியே, யங்கதமுதுசொலோ டவ்வேழ்நிலத்தும், வண்புகழ்மூவா தண்பொழில்வரைப்பி, னாற்பெயரெல்லை யகத்தவாய்வழங்கும், யாப்பியன்மொழிய வென்மனார்புலவர்.

78. மரபேதானு, நாற்சொல்லியலான் யாப்புவழிபட்டன.

79. அகவலென்ப தாசிரியம்மே.

80. அஃதாஅன்றெனப வெண்பாயாப்பே.

81. துள்ளலோசை கலியெனமொழிப.

82. தூங்கலோசை வஞ்சியாகும்.

83. மருட்பாவேனை யிருசார் பல்லது, தானிது வென்னுந்தனிநிலையின்றே.

84. அவ்வியல்பல்லது பட்டாங்கு கிளவார்.

85. தூக்கியல்வகையே யாங்கெனமொழிப.

86. மோனையெதுகை முரணேயியைபென, நூனெறிமரபின் றொடைவகையென்ப.

87. அளபெடைதலைப்பெய வைந்துமாகும்.

88. பொழிப்புமொரூஉவுஞ் செந்தொடைமரபு,மமைத்தனர்தெரியினவையுமாருளவே.

89. நிரனிறுத்தமைத்தலு மிரட்டையாப்பு, மொழிந்தவற்றியலான் முற்றுமென்ப.

90. அடிதொறுந்தலையெழுத் தொப்பதுமோனை.

91. அஃதொழித்தொன்றி னெதுகையாகும்.

92. ஆயிருதொடைக்குங் கிளையெழுத்துரிய.

93. மொழியினும் பொருளினு முரணுதன்முரணே.

94. இறுவாயொப்பினஃ தியைபெனமொழிப.

95. அளபெழினவையே யளபெடைத்தொடையே.

96. ஒருசீரிடையிட் டெதுகையாயிற், பொழிப்பெனமொழிபபுலவராறே.

97. இருசீரிடையிடி னொரூஉவெனமொழிப.

98. சொல்லியதொடையொடு வேறுபட்டியலிற், சொல்லியபுலவர் செந்தொடையென்ப.

99. மெய்பெறுமரபிற் றொடைவகைதானே, யையீராயிரத் தாறைந்நூற்றொடு, தொண்டுதலையிட்ட பத்துக்குறையெழுநூற், றொன்பஃதென்பவுணர்ந்திசினோரே.

100. தெரிந்தனர்விரிப்பின் வரம்பிலபல்கும்.

101. தொடைநிலைவகையே யாங்கெனமொழிப.

102. மாத்திரைமுதலாவடிநிலைகாறு நோக்குதற்காரண நோக்கெனப்படுமே.

103. ஆசிரியம்வஞ்சி வெண்பாக்கலியென,நாலியற்றெனப, பாவகைவிரியே.

104. அங்கிலேமருங்கினறமுதலாகிய, மும்முதற்பொருட்குமுரியவென்ப
105. பாவிரிமருங்கினைப் பண்புறத்தொகுப்பி,னாசிரியப்பாவெண்பாவெ
னருங், காயிருபாவினுளடங்குமென்ப. [டுமே.
106. ஆசிரியநடைத்தேவஞ்சியேனை, வெண்பாநடைத்தே கலியெனப்ப
107. வாழ்த்தியல் வகையே நாற்பாற்கு முரித்தே.
108. வழிபடுதெய்வ நிற்புறங்காப்பப், பழிதீர்செல்வமொடுவழிவழிசி
றந்து, பொலிமினென்னும் புறநிலைவாழ்த்தே, கலிநிலைவகையும் வஞ்சியு
ம்பெறாஅ.
109. வாயுறைவாழ்த்தே யவையடக்கியலே, செவியறிவுறூஉவென்
றவையுமன்ன.
110. வாயுறைவாழ்த்தே வயங்கநாடின் வேம்புங்கடுவும்போலவெஞ்
சொற், றுங்குதலின்றி வழிநனிபயக்குமென், றோம்படைக்கிளவியின் வா
யுறுத்தற்றே.
111. அவையடக்கியலே யரிறபத்தெரியின்,வல்லார்கூறினும்வகுத்தனர்
கொண்மினென், றெல்லாமாந்தர்க்கும் வழிமொழிந்தனரே.
112. செவியறைதானே,பொங்குதலின்றிப் புரையோர்நாப்ப,ணவிலுதல்
கடனெனச் செவியுறுத்தற்றே. [ன்ப.
113. ஒத்தாழிசையு மண்டிலயாப்புங், குட்டமுநேரடிக்கொட்டினவெ
114. குட்டமெருத்தடி யுடைத்துமாகும்.
115. மண்டிலங்குட்ட மென்றிவையிரண்டுஞ், செந்தூக்கியல வென்மனா
ர்புலவர்.
116. ? அகவலிசையனவகவன் மற்றவை, எஒஈஆஎன்னையென்றிறுமே. ?
117. நெடுவெண்பாட்டே குறுவெண்பாட்டே, கைக்கிளைபரிபாட்டங்கத
ச்செய்யுளோ, டொத்தவையெல்லாம் வெண்பாயாப்பின. [மே.
118. கைக்கிளைதானே வெண்பாவாகி, யாசிரியவியலான் முடியவும்பெறு
119. பரிபாடல்லே தொகைநிலைவகையா, னிதுபாவென்னு மியனெறி
யின்றிப், பொதுவாநிற்றற்கு முரித்தெனமொழிப.
120. கொச்சகமராகஞ் சுரிதகமெருத்தொடு, செப்பியநான்குந் தனக்
குறுப்பாகக், காமங்கண்ணிய நிலைமைத்தாகும்.
121. சொற்சீரடியுமுடுகியலடியு, மப்பாநிலைமைக்குரியவுமாகும்.
122. கட்டுரைவகையானெண்ணொடு புணர்ந்து,முட்டடியின்றிக்குறைவு
சீர்த்தாகியு, மொழியசையாகியும் வழியசைபுணர்ந்துஞ், சொற்சீர்த்திறு
தல் சொற்சீர்க்கியல்பே.
123. அங்கதந்தானே யரிறபத்தெரியிற், செம்பொருள்கரந்த தெனவிரு
வகைத்தே.
124. செம்பொருளாயின் வசையெனப்படுமே.
125. மொழிகரந்துசொல்லி னதுபழிப்பாகும்.

126. செய்யுட்டாமே யிரண்டெனமொழிப.

127. புகழொடும் பொருளொடும் புணர்ந்தன்றாயின், செவியுறைச்செய்யுளதுவெனமொழிப.

128. வசையொடு நசையொடும் புணர்ந்தன்றாயி, னங்கதச்செய்யு ளென்மனார்புலவர்.

129. ஒத்தாழிசைக்கலி கலிவெண்பாட்டே, கொச்சகமுறழொடுகலிநால்வகைத்தே.

130. இருவகையினொத்து மொவ்வாவியலினுந், தெரியிழைமகளிரொடு மைந்தரிடைவரூஉங், கலப்பேயாயினும் புலப்பேயாயினு, மைமந்திணைமரபினறிவுவரத்தோன்றிப், புணர்ப்பொடு புணர்ந்தபொருட்டிற முடையது, கலியெனப்படூஉங் காட்சித்தாகும்.

131. அவற்றுள், ஒத்தாழிசைக்கலி யிருவகைத்தாகும்.

132. இடைநிலைப்பாட்டொடு தரவுபோக்கடையென, நடைநவின்றொழுகு மொன்றெனமொழிப.

133. தரவேதானுநாலடியிழிபா, யாறிரண்டுயர் பேறவும்பமே.

134. இடைநிலைப்பாட்டே, தரவகப்பட்டமரபினவென்ப.

135. இடைநிலைக்கிளவி தாழிசைப்பின்னர்,நடைநவின்றொழுகு மாங்கென்கிளவி.

136. போக்கியல்வகையே வைப்பெனப்படுமே.

137. தரவியலொத்துமதனகப்பட்டும், புரைதீரிறுதி நிலையுரைத்தன்றே.

138. ஏனையொன்றே, தேவர்ப்பராவு முன்னிலைக்கண்ணே.

139. அதுவே, வண்ணகமொருபோ கெனவிருவகைத்தே.

140. வண்ணகந்தானே, தரவேதாழிசை யெண்ணேவாரமென், றந்நால்வகையிற் றோன்றுமென்ப.

141. தரவேதானு,நான்குமாறு மெட்டுமென்ற,நேரடிபற்றிய நிலைமைத்தாகும். [ன்ப.

142. ஒத்துமூன்றாகு மொத்தாழிசையே, தரவிற்சுருங்கித் தோன்றுமெ

143. அடக்கியல்வாரந் தரவோடொக்கும்.

144. முதற்றொடைபெருகிச் சுருங்குமனெண்ணே.

145. எண்ணிடையொழிதலேதமின்றே, சின்னமல்லாக்காலையான.

146. ஒருபோகியற்கையு மிருவகைத்தாகும்.

147. கொச்சகவொருபோகம் போதரங்கமென், றொப்பநாடியுணர்தல் வேண்டும்.

148. அவற்றுட்டரவின் றாகித்தாழிசை பெற்றுந்தாழிசை யின்றித்தரவுடைத்தாகியு, மெண்ணிடையிட்டுச் சின்னங்குன்றியு, மடக்கியலின்றியடிநிமிர்ந்தொழுகியும், யாப்பினும்பொருளினும் வேற்றுமையுடையது, கொச்சகவொருபோகாகுமென்ப.

149. ஒருபான்சிறுமை யிரட்டியதனுயர்பே. [லை.

150. அம்போதரங்க மறுபதிற்றடித்தே,செம்பால்வாரஞ் சிறுமைக்கெல்

151. எருத்தேகொச்சக மாராகஞ்சிற்றெ, ணடக்கியல்வாரமோ டங்கிலைக்குரித்தே. [ண்பாட்டே.

152. ஒருபொருணுதலிய வெள்ளடியியலாற், றிரிபின்றிமுடிவதுகலிவெ

153. தரவும்போக்கு மிடையிடைமிடைந்து, மைஞ்சீரடக்கியு மாறுமெய்பெற்றும், வெண்பாவியலான் வெளிப்படத்தோன்றும்.

154. பாநிலைவகையே கொச்சகங்கலியென,நூனவில்புலவர் நுவன்றறைந்தனரே.

155. கூற்றுமாற்றமு மிடையிடைமிடைந்தும், போக்கின்றாதலு றழ்கலிக்கியல்பே.

156. ஆசிரியப்பாட்டி னளவிற்கெல்லை, யாயிரமாகு மிழிபுமூன்றடியே.

157. நெடுவெண்பாட்டே முந்நாலடித்தே, குறுவெண்பாட்டிற் களவெழுசீரே.

158. அங்கதப்பாட்டள வவற்றொடொக்கும்.

159. கலிவெண்பாட்டே கைக்கிளைச்செய்யுட், புறநிலைவாயுறை செவியறிவென்றிவை, தொகுநிலையளவி னடியிலவென்ப.

160. புறநிலைவாயுறை செவியறிவுறூஉவெனத், திறநிலைமூன்றுந் திண்ணிதிற்றெரியின், வெண்பாவியலினு மாசிரியவியலினும், பண்புறமுடியும் பாவினவென்ப.

161. பரிபாட்டெல்லை, நாலீரைம்பதுயர்வடியாகவையைந்தாகுமிழிபடிக்கெல்லை.

162. அளவியல்வகையே யனைவகைப்படுமே. [மொழிப.

163 எழுநிலத்தெழுந்த செய்யுட்டெரியி, னடிவரையில்லன வாறெனமொழிப.

164. அவைதாம், நூலினான வுரையினான, நொடியொடுபுணர்ந்த பிசியினான, வேதநூதலிய முதுமொழியான, மறைமொழிகிளந்த மந்திரத்தான, கூற்றிடைவைத்த குறிப்பினான.

165. அவற்றுள், நூலெனப்படுவது நுவலுங்காலை, முதலுமுடிவு மாறுகோளின்றித், தொகையினும்வகையினும் பொருண்மைகாட்டி, யுண்ணின்றகன்ற வுரையொடுபொருந்தி, நுண்ணிதின்விளக்க லதுவதன்பண்பே.

166. அதுவேதானு மீரிருவகைத்தே.

167. ஒருபொருணுதலிய சூத்திரத்தானு, மினமொழிகிளந்த வோத்தினானும், பொதுமொழிகிளந்த படலத்தானு, மூன்றுறுப்படக்கிய பிண்டத்தானுமென், றாங்கனைமரபி னியலுமென்ப.

168. அவற்றுட் சூத்திரந்தானே, ஆடிநிழலி னறியத்தோன்றி, நாடுதலின்றிப் பொருணனிவிளங்க, யாப்பினுட்டோன்றயாத்தமைப்பதுவே.

169. நேரினமணியை நிரல்படவைத்தாங், கோரினப்பொருளை யொருவழிவைப்ப, தோத்தெனமொழிப வுயர்மொழிப்புலவர்.

170. ஒருநெறியின்றி விரவியபொருளாற், பொதுமொழிதொடரி னது படலமாகும்.

171. மூன்றுறுப்படக்கிய தன்மைத்தாயிற், றோன்றுமொழிப்புலவரது பிண்டமென்ப.

172. பாட்டிடைவைத்த குறிப்பினானும்,பாவின்றெழுந்த கிளவியானும், பொருளொடுபுணராப் பொய்மொழியானும், பொருளொடுபுணர்ந்த நகைமொழியானுமென், றுரைவகைநடையே நான்கெனமொழிப.

173. அதுவேதானு மிருவகைத்தாகும்.

174. ஒன்றேமற்றுஞ் செவிலிக்குரித்தே.

175. ஒன்றேயார்க்கும் வரைநிலையின்றே.

176. ஒப்பொடுபுணர்ந்த வுவமத்தானுந், தோன்றுவதுகிளந்த துணிவினானுமென், றிருவகைத்தேபிசிநிலைவகையே.

177. நுண்மையுஞ்சுருக்கமு மொளியுமுடைமையு, மென்மையுமென்றிவை விளங்கத்தோன்றிக், குறித்தபொருளை முடித்தற்குவரூஉ, மேதுநுதலியது முதுமொழியென்ப.

178. நிறைமொழிமாந்த ராணையிற்கிளந்த, மறைமொழிதானே மந்திரமென்ப.

179. எழுத்தொடுஞ் சொல்லொடும் புணராதாகிப், பொருட்புறத்ததுவே குறிப்பு மொழியென்ப.

180. பாட்டிடைக்கலந்த பொருளவாகிப், பாட்டினியலபண் ணத்தினியல்பே. (பண்ணத்தியியல், பண்ணத்திய்யே.)

181. அதுவேதானும் பிசியொடுமானும்.

182. அடிநிமிர்கிளவி யீராறாகும்.

183. அடியிகந்துவரினுங் கடிவரையின்றே.

184. கிளரியல்வகையிற் கிளந்தனதெரியி, னளவியல்வகையே யனைவகைப்படுமே.

185. கைக்கிளைமுதலா வெழுபெருந்திணையு, முற்கிளந்தனவே முறைமையினன.

186. காமப்புணர்ச்சியு மிடந்தலைப்பாடும், பாங்கொடுதழாலுந் தோழியிற்புணர்வுமென், றுங்கநால்வகையினு மடைந்தசார்வொடு, மறைபெனமொழிதன் மறையோராறே.

187. மறைவெளிப்படுதலுந் தமரிற்பெறுதலு, மிவைமுதலாகிய வியனெறிதிரியாது, மலிவும்புலவியு மூடலுமுணர்வும், பிரிவொடுபுணர்ந்தது கற்பெனப்படுமே.

188. மெய்பெறுவகையே, கைகோள்வகையே

189. பார்ப்பான்பாங்கன் றோழிசெவிலி,சீர்த்தகுசிறப்பிற் கிழவன்கிழத்தியோ, டளவியன்மரபி னறுவகையோருங், களவினிற்கிளவிக் குரியரென்ப.

190. பாணன்கூத்தன் விறலிபரத்தை, யாணஞ்சான்ற வறிவர்கண்டோர் பேணுதகுசிறப்பிற் பார்ப்பான்முதலா, முன்னுறக்கிளந்த கிளவியொடு தொகைஇத், தொன்னெறிமரபிற் கற்பிற்குரியர்.

191. ஊருமயலுஞ் சேரியோரு, நோய்மருந்தறிநருந் தந்தையுந் தன்னையும், கொண்டெடுத்து மொழியப்படுதலல்லது, கூற்றவணின்மை யாப்புறத்தோன்றும். [ன்றுது.

192. கிழவன்றன்னொடுங் கிழத்திதன்னொடு, நற்றாய்கூறன் முற்றத்தோ

193. ஒண்டொடிமாதர் கிழவன்கிழத்தியொடு, கண்டோர்மகிழ்தல் கண்டதென்ப.

194. இடச்சுரமருங்கிற் கிழவன்கிழத்தியொடு, வழக்கியலாணையிற் கிளத்தற்குமுரியர்.

195. ஒழிந்தோர்கிளவி கிழவன்கிழத்தியொடு, மொழிந்தாங்குரியர் முன்னத்தினெடுத்தே. [னாவரே.

196. மனையோள் கிளவியுங் கிழவன் கிளவியு, நினையுங்காலைக் கேட்கு

197. பார்ப்பாரறிவ ரென்றிவர்கிளவி, யார்க்கும்வரையார்யாப்பொடுணர்ந்தே.

198. ஒருநெறிப்பட்டாங் கோரியன்முடியுங், கருமநிகழ்ச்சி யிடமென மொழிப. [லவே.

199. பரத்தைவாயி லெனவிருகூற்றுங், கிழத்திசுட்டாக் கிளப்புப்பயனி

200. வாயிலுசாவே தம்முளுரிய.

201. ஞாயிறுதிங்க ளறிவேநாணே, கடலேகானல் விலங்கேமானே, புலம்புறுபொழுதே புள்ளேநெஞ்சே, யவையல்பிறவு நுதலியநெறியாற், சொல்லுனபோலவுங் கேட்குனபோலவுஞ், சொல்லியாங்கமையு மென்மனார்புலவர்.

202. இறப்பேநிகழ்வே யெதிர்வேபகலெனுந், திறத்தியன்மருங்கிற் றெரிந்தெனருணரப், பொருணிகழ் வுரைப்பது காலமாகும்.

203. இதுநனிபயக்கு மிதனாமாறென்னுந், தொகைநிலைக்கிளவி பயனெனப்படுமே.

204. உய்த்துணர்வின்றித் தலைவரும்பொருளின், மெய்ப்படமுடிப்பது மெய்ப்பாடாகும். [ததுவே.

205. எண்வகையியனெறி பிழையாதாகி, முன்னுறக்கிளந்த முடிபின

206. சொல்லொடுங் குறிப்பொடு முடிவுகொளியற்கை, புல்லியகிளவி யெச்சமாகும்.

207. இவ்விடத்திம்மொழி யிவரிவர்க்குரியவென், றவ்விடத்தவரவர்க்குரைப்பது முன்னமே.

208. இன்பமுமிடும்பையும் புணர்வும்பிரிவு, மொழுக்கமுமென்றிவை யிழுக்கநெறியின்றி, யிதுவாகித்திணைக் குரிப்பொருளெனுமது, பொதுவாய்நிற்றல் பொருள்வகையென்ப.

209. அவ்வமாக்கமும் விலங்குமன்றிப், பிறவவ்வவரினுந் திறவதினுடித், தத்தமியலான் மரபொடுமுடியி, னத்திறந்தானே துறையெனப்படுமே.

210. அகன்றுபொருள்கிடப்பினு மணுகியநிலையினு, மியன்றுபொருண்முடியத் தந்தனருணர்த்தன், மாட்டெனமொழிதல் பாட்டியல்வழக்கே.

211. மாட்டுமெச்சமு நாட்டலின்றி, யுடனிலைமொழியினுந் தொடர்நிலைபெறுமே.

212. வண்ணந்தானே நாலைந்தென்ப.

213. அவைதாம்; பாஅவண்ணந் தாஅவண்ணம், வல்லிசைவண்ண மெல்லிசைவண்ண, மியைபுவண்ண மளபெடைவண்ணம், நெடுஞ்சீர்வண்ணங்குறுஞ்சீர்வண்ணஞ் சித்திரவண்ண நலிபுவண்ணம், அகப்பாட்டுவண்ணம் புறப்பாட்டுவண்ண, மொழுகுவண்ண, மொரூஉவண்ண மெண்ணுவண்ண, மகைப்புவண்ணந் தூங்கல்வண்ண, மேந்தல்வண்ண முருட்டுவண்ண முடுகுவண்ணமென், றுங்கவையென்ப வறிந்திசினோரே.

214. அவற்றுட், பாஅவண்ணஞ், சொற்சீர்த்தாகி நூற்பாற்பயிலும்.

215. தாஅவண்ண, மிடையிட்டுவந்த வெதுகைத்தாகும்.

216. வல்லிசைவண்ணம் வல்லெழுத்துப்பயிலும்.

217. மெல்லிசைவண்ண மெல்லெழுத்துமிகுமே.

218. இயைபுவண்ண மிடையெழுத்துமிகுமே.

219. அளபெடைவண்ண மளபெடைபயிலும்.

220. நெடுஞ்சீர்வண்ண நெட்டெழுத்துப்பயிலும்.

221. குறுஞ்சீர்வண்ணங் குற்றெழுத்துப்பயிலும்.

222. சித்திரவண்ண, நெடியவுங்குறியவு நேர்ந்துடன்வருமே.

223. நலிபுவண்ண மாய்தம்பயிலும்.

224. அகப்பாட்டுவண்ண, முடியாத்தன்மையின் முடிந்ததன்மேற்றே.

225. புறப்பாட்டுவண்ண, முடிந்ததுபோன்று முடியாதாகும்.

226. ஒழுகுவண்ண மோசையினொழுகும்.

227. ஒரூஉவண்ண மொரூஉத்தொடை தொடுக்கும்

228. எண்ணுவண்ண மெண்ணுப்பயிலும்.

229. அகைப்புவண்ண மறுத்தறுத்தொழுகும்.

230. தூங்கல்வண்ணம் வஞ்சிபயிலும்.

231. ஏந்தல்வண்ணஞ், சொல்லியசொல்லிற் சொல்லியதுசிறக்கும்.

232. உருட்டுவண்ண மராகம்தொடுக்கும்.

233. முடுகுவண்ண, மடியிறந்தோடி யதனோரற்றே.

234. வண்ணந்தாமே யிவையெனமொழிப.

235. வனப்பியலுனே வகுக்குங்காலை, சின்மென்மொழியாற் றாயபனுவலி, னம்மைதானே யடிநிமிர்பின்றே

236. செய்யுண்மொழியாற் சீர்ப்புனைந்தியாப்பி, னவ்வகைதானேயழகெனப்படுமே

237. தொன்மைதானே, யுரையொடுபுணர்ந்த பழமைமேற்றே.

238. இழுமென்மொழியான் விழுமியதுநுவலினும், பரந்தமொழியா னடிமிர்தொழுகினுந் தோலெனமொழிப தொன்னெறிப்புலவர்.

239. விருந்தேதானும், புதுவதுகிளந்த யாப்பின்மேற்றே.

240. ஞகாரைமுதலா ளகாரவீற்றுப், புள்ளியிறுதி யியைபெனப்படுமே.

241. தெரிந்தமொழியாற் செவ்விதிற்கிளந்து, தேர்தல்வேண்டாது குறித்ததுதோன்றிற், புலனெனமொழிப புலனுணர்ந்தோரே,

242. ஒற்றொடுபுணர்ந்தவல் லெழுத்தடக்காது, குறளடிமுதலா வைந்தடியொப்பித், தோங்கியமொழியா னாங்கனமொழுகி, னிழைபினிலக்கண மியைந்ததாகும்.

243. செய்யுண்மருங்கின் மெய்பெறநாடி, யிழைத்தவிலக்கணம் பிழைத்தனபோல, வருபவுளவெனும் வந்தவற்றியலாற், றிரிபின்றிமுடித்த றெள்ளியோர்கடனே.

CHAPTER IX. மரபியல். MISCELLANEA.

1. மாற்றருஞ்சிறப்பின் மரபியல்கிளப்பின், பார்ப்பும்பறழுங் குட்டியுங் குருளையுங், கன்றும் பிள்ளையு மகவுமறிய், மொன்பதுங்குழவியொ டிளமைப்பெயரே.

2. ஏறுமேற்றையு மொருத்தலுங்களிறுஞ், சேவுஞ்சேவலு மிரலையுங்கலையு, மோத்தையுந்தகரு முதளுமப்பரும், போத்துங்கண்டியுங் கடுவனும்பிறவும், யாத்தவாண்பாற்பெயரெனமொழிப.

3. பெடையும் பேடையும் பெட்டையும்பெண்ணு, மூடுநாகுங்கடமையுமளகு, மந்தியும்பாட்டியும் பிணவும்பிணையு, மந்தஞ்சான்ற பிடியொடு பெண்ணே.

4. ¶ அவற்றுட், பார்ப்பும்பிள்ளையும் பறப்பவற்றிளமை.

5. தவழ்பவைதாமு மவற்றோரன்ன.

6. மூங்காவெருகெலி மூவரிப்பணிலோ, டாங்கவைநான்குங் குட்டியென்ப.

7. பறழெனப்படினு முறழாண்டில்லை.

8. நாயேபன்றி புலிமுயனான்கு, மாயுங்காலைக் குருளையென்ப.

9. நரியுமற்றே நாடினர்கொளினே.

10. குட்டியும்பறழுங் கூற்றவண்வரையார்

11. பிள்ளைப்பெயரும் பிழைப்பாண்டில்லைக், கொள்ளுங்காலை நாயலங்கடையே.

12. யாடுங்குதிரையு நவ்வியுமுழையு, மோடும்புலவா யுளப்படமறியே.

13. கோடுவாழ்குரங்குங் குட்டிகூறும்.

14. மகவும்பிள்ளையும் பறழும்பார்ப்பு, மவையுமன்ன வப்பாலான.

15. யானைபுங்குதிரையுங் கழுதையுங்சமைமையு, மானேடைந்துங் கன்றெனற்குரிய.

16. எருமையுமரையும வயாரண்டே.

17. கவரியுங்கராமு நிரவற்றுள்ளே.

18. ஒட்டகமவற்றெ பொருவழிநிலையும்.

19. குஞ்சரம்பெறுமே குழவிப்பெயர்க்கொடை.

20. ஆவுமெருமையு மதுசொலப்படுமே.

21. கடமையுமரையு முதனிலையொன்றும்.

22. குரங்குமுசவு மூகமுமூன்று, நிரம்பநாடி னப்பெயர்க்குரிய.

23. குழவியுமகவு மாயிரண்டல்லவை கிழவவல்ல மக்கட்கண்ணே.

24. பிள்ளைகுழவி கன்றேபோத்தென கொள்ளவுமமைய மோரறி வுயிர்க்கே.

25. நெல்லும்புல்லு நேராராண்டே.

26. சொல்லியமரபி விளமைதானே, சொல்லுங்காலை யவையலதிலவே.

27. ¶ ஒன்றறிவதுவே யுற்றறிவதுவே, யிரண்டறிவதுவே யதனொடுநாவே, மூன்றறிவதுவே யவற்றொடுமூக்கே, நான்கறிவதுவே யவற்றொடுக ணே, ஐந்தறிவதுவே யவற்றொடுசெவியே, யாறறிவதுவே யவற்றொ டுமனமே, நேரிதினுணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.

28. புல்லுமரனு மோரறிவினவே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே.

29. நந்துமுரனுமீரறிவினவே,பிறவுமுளவேயக்கிளைப்பிறப்பே(முரளும்)

30. சிதலுமெறும்பு மூவறிவினவே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே.

31. வண்டும்தும்பியு நான்கறிவினவே,பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே.

32. மாவும்புள்ளு மையறிவினவே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே.

33. மக்கடாமே யாறறிவுயிரே, பிறவுமுளவே யக்கிளைப்பிறப்பே.

34. ஒருசார்விலங்கு மதுபெறற்குரிய.

35. ¶ வேழக்குரித்தே விதந்துகளிறென்றல், கேழற்கண்ணுங் கடிவரையின்றே.

36. புல்வாய்புலியுழை மரையேகவரி, சொல்லியகராமோ டொருத்தலொன்றும்.

37. வார்கோட்டியானையும் பன்றியுமன்ன.

38. ஏற்புடைத்தென்ப வெருமைக் கண்ணும்.

39. பன்றிபுல்வா யுழையேகவரி, யென்றிவைநான்கு மேறெனற்குரிய.

40. எருமையுமரையும் பெற்றமுமன்ன.

41. கடல்வாழ்சுறவு மேறெனப்படுமே.

42. பெற்றமெருமை புலிமரைபுல்வாய், மற்றிவை யெல்லாம் போத்தெனப்படுமே.

43. நீர்வாழ்சாதியு ளறுபிறப்புரிய.

44. மயிலுமெழாஅலும் பயிலத்தோன்றும்.

I

45. இரலையுங்கலையும் புல்வாய்க்குமுரிய. (புல்வாய்க்குரிய,
46. கலையென்காட்சி யுழைக்குமுரித்தே.
47. நிலையிற்றப்பெயர் முசுவின்கண்ணும்.
48. மோத்தையுந்தகருமுதளுமப்பரும்,யாத்தவென்ப யாட்டின்கண்ணே
49. சேவற்பெயர்க்கொடை சிறகொடுசிவணு, மாயிருந்தூவிய மயிலல
ங்கடையே. [னமொழிப.
50. ஆற்றலொடுபுணர்ந்த வாண்பாற்கெல்லா. மேற்றைக்கிளவி யுரித்தெ
51. ஆண்பாலெல்லா மாணெனற்குரிய, பெண்பாலெல்லாம் பெண்ணெ
னற்குரிய, காண்பவையவையவை யப்பாலான.
52. பிடியேபெண்பெயர் யானைமேற்றே.
53. ஒட்டகங்குதிரை கழுதைமரையிவை, பெட்டையென்னும் பெயர்க்
கொடைக்குரிய.
54. புள்ளுமுரிய வப்பெயர்க்கென்ப.
55. பெடையும் பேடையும் நாடிறென்றும்.
56. கோழிகூகை யாயிரண்டல்லவை, சூழுங்காலை யளகெனலமையா.
57. அப்பெயர்க்கிழமை மயிற்குமுரித்தே.
58. புல்வாய்நவ்வியுழையேகவரி,சொல்வாய்நாடிற்பிணையெனப்படுமே.
59. பன்றிபுல்வாய் நாயெனமூன்று,மொன்றியவென்ப பிணவென்பெய
ர்க்கொடை.
60. பிணவலெனினு மவற்றின்மேற்றே.
61. பெற்றமுமெருமையு மரையுமாவே.
62. பெண்ணும்பிணவு மக்கட்குரிய.
63. எருமையுமரையும் பெற்றமுநாகே.
64. நீர்வாழ்சாதியுணந்துநாகே.
65. முடிவலுங்கடமையு மாடல்பெருஅ.
66. பாட்டியென்ப பன்றியும்நாயும்.
67. நரியுமற்றே நாடினர்கொளினே.
68. சூரங்குமுசுவு மூகமுமந்தி.
69. குரங்கினேற்றினைக் கடுவனென்றலு மரம்பயில்கூகையைக் கோ
ட்டானென்றலுஞ், செவ்வாய்க்கிளியைத் தத்தையென்றலும், வெவ்
வாய்வெருகினைப் பூசையென்றலுங், குதிரையுளாணினைச் சேவலென்ற
லு, மிருணிறப்பன்றியை யேனமென்றலு, மெருமையுளாணினைக் கண்
டியென்றலு,முடியவந்தன வவ்வழக்குண்மையிற, கடியலாகா கடனறிந்
தோர்க்கே.
70. பெண்ணுமாணும் பிள்ளையுமவையே.
71. ¶நூலேகரக முக்கோன்மனையே யாயுங்காலை யந்தணர்க்குரிய.
72. படையுங்கொடியுங் குடையுமுரசு,நடைநவில்புரவியுங் களிறுந்தே
ருந், தாருமுடியு நேர்வனபிறவுந், தெரிவுகொள்செங்கோ லரசர்க்குரிய.